மீனம் (பங்குனி) - 2020

# நம்மட முற்றம்

அறிவைத் தந்திடத் துடிக்கும் தமிழ்த் திங்கள் ஏடு

உருபா 60.00




தாக்குதல் - இடிமுழக்கம்

துளிராதோ உறவுகள்

விதியின் [illegible]

நூற்ற[illegible] காணும் இராஜராஜேஸ்வரி அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகைத் தாங்கும் தூண்கள் பெண்கள்

திருமதி. குகவதனி பரமேஸ்வரன்
திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம்,
திருக்கோணமலை



உலகமெங்கும் இனம், கலாசாரம், பொருளாதாரம், அரசியல் போன்ற வேறுபாடுகளைக் கடந்து உலக மகளிர் நாள் மார்ச் மாதம் 8 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது. 1789 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் நாள் விடுதலை, சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க் கொடி உயர்த்தினர்.

ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், வேலைக்கேற்ற கொடுப்பனவு, எட்டுமணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்றும் இவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். இக் கிளர்ச்சியின் உச்சக்கட்டமாக அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான்.

தொடர்ந்து கிறீஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து பிரான்ஸில் 2வது குடியரசை நிறுவிய லூயிஸ் பினாங்க் என்ற மன்னர் பெண்களை அரசவையின் ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்து பெண்களுக்கு வாக்களிக்க ஒப்புதல் அளித்தார்.

அந்த நாள் மார்ச் 8ம் நாள் ஆகும். அதன் பிறகு 1910 இல் 17 நாடுகளில் இருந்து வந்திருந்த பெண்கள் டென்மார்க் நாட்டின் கோபன்கேனில் ஒன்று கூடி பெண்கள் நாளினை உலக அளவில் கொண்டாட முடிவு செய்தனர்.

இந்நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றது. சென்ற ஆண்டு (2019) "Think Equal, Build Smart, Innovate for Change" என்ற தொனிப்பொருள் உருவாக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் கருப்பொருள் "I am Generation Equality Realizing Women's Right" என்பதாகும். அதாவது, "நான் தலைமுறை சமத்துவம் நிறைந்தவள் என்பதுடன் பெண் உரிமையை உணர்ந்தவள்" என்பாகும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்வி வாய்ப்புகளும், வேலை வாய்ப்புக்களும் ஏற்படுத்திய பொருண்மிய விடுதலை பெண்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. புதிய அறிவியல் உலகில் பெண்கள் சந்திர மண்டலம் வரை சென்றிருக்கின்றார்கள் அரசியல், கணிணி, மருத்துவம், பொறியியல் என்று அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பங்கு அளப்பரியதாகக் காணப்படுகின்றது. எனினும் பெண்களுக்கெதிரான கொடுமைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இதற்கு பெண்கள் காரணமா? ஆண்கள் காரணமா? இவ் வினாவிற்குரிய விடை தேடலாகவே உள்ளது.

இன்று நம் உலகில் காண்கின்ற எல்லா விதமான செயல்களும் சமுதாயத்தில் நடக்கின்ற எல்லாவிதமான இயக்கங்களும், நம்மைச் சுற்றி நடக்கும் வேலைகள் அத்தனையின் அடிப்படையும் வெறும் எண்ணங்களின் வெளிப்பாடுகளே, மனிதனுடைய மனவுறுதியின் வெளிப்பாடுகளே. இயந்திரங்கள், கருவிகள், நகரங்கள், கப்பல்கள், போர் வீரர்கள் ஆகிய அனைத்தும் மனிதனின் மனவுறுதியின் வெளிப்பாடுகளே. இந்த மனவுறுதி குணத்தால் அமைகின்றது.

ஒருவரது செயல்களே அவரது குணத்தை உருவாக்குகின்றன. செயல் எத்தன்மையதோ அத்தன்மையதே மனவுறுதியின் வெளிப்பாடும். இந்த உலகம் இதுவரை தோற்றுவித்துள்ள மிகச் சிறந்த மனவுறுதி கொண்ட மனிதர்கள் எல்லோருமே மற்றவர்கள் கனவிலும் நினைக்காத உலகமே பார்த்து ஆச்சரியத்தால் வெலவெலத்துப் போகும் காரியங்களைச் செய்பவர்களாக தங்களின் ஈடு இணையற்ற மனவுறுதியால் உலகத்தையே மாற்றியமைத்தவர்களாக காணப்பட்டார்கள், இதில் பெண்களின் பங்கே அளப்பரியன.

2020ம் ஆண்டில் ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டுள்ள 26 நாட்களாக நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் 2வது நாள் கூட்டம் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கதைப்பதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இது பெருமைக்குரிய விடயமாகும். எனவே வார்த்தைகளாலோ அல்லது செயற்பாடுகளாலோ பெண்களுக்கெதிரான நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்பது எனது அவா. இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் உலக நாடுகளினால் எடுக்கப்பட்டு வருகின்றன.



மனிதன் மிகவும் பித்துப்பிடித்த உயிரி. கண்ணுக்குத் தெரியாத கடவுளை இல்லிடும் அவன் கண்ணுக்குத் தெரியும் இயற்கையை அழித்துக் கொண்டிருக்கிறான். அவன் அழிக்கும் இயற்கைதான் அவன் வழிபடும் கடவுள் என்பது அவனுக்குத் தெரிவதில்லை.

-ஹியூபர்ட் ரீவ்ஸ்
கனடா-பிரெஞ்ச் அறிவியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அறிவோம்

தமிழ்ப்பித்தன்,

தமிழர்களாகிய நாங்கள் நாள்தோறும் பயன்படுத்துஞ் சொற்கள் பேச்சிலும் எழுத்திலும் கூடுதலாகப் பிறமொழிச் சொற்களாகவே அமைந்துள்ளன. இதனை எண்ணித் தமிழார்வலர்கள் கவலையுறுகின்றனர்.

தமிழர்களுடன் ஆரியர் கலந்த பிற்பாடு தமிழ்மொழியிலே ஆரியச் சொற்கள் கலக்கத் தொடங்கின. இவ்வகையான கலப்புச்சொற்களில் சில இயல்பாகக் கலந்தன. கூடுதலான சொற்கள் திட்டமிட்டுக் கலக்கப்பட்டன. இந்நிலைமை தொல்காப்பியத்துக்குப் பின்னர் விரைவாக ஏற்படுத்தப்பட்டன.

ஆரியரின் வருகையைத் தொடர்ந்து வெளிநாட்டவரின் வருகை, அவர்களது ஆட்சி ஆகியவைகளாலும் பிறமொழிச் சொற்கள் தமிழிலே கலந்தன. இடைப்பட்ட காலத்திலே வடசொற்களைக் கூடுதலாகக் கலந்து பேசுவதும் எழுதுவதும் சிறப்பானது என்ற கருத்தும் தமிழரிடையயே நிலவியது. இந்நிலைமையில் ஏறக்குறைய 50 விழுக்காடு வடசொற்கள் தமிழிலே கலக்கப்பட்டன. இவ்வாறு கலந்து பேசப்பட்டவை - எழுதப்பட்டவை "மணிப்பிரவாளநடை" என்று அழைக்கப்பட்டது.

இவ்வாறான நிலைமையைக் கண்டு கவலையுற்ற சூரிய நாராயண சாத்திரியார், சுவாமி வேதாசலம், மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் போன்றோர் தமிழ்மொழியைக் கலப்பில்லாத வகையில் பயன்படுத்த வேண்டும் என்று கூறியதுடன் அமையாது முதலிருவரும் தமது வடமொழிப் பெயர்களைத் தூய தமிழில் மாற்றியமைத்தனர். இதன் படி சூரியநாராயண சாத்திரயார் பரிதிமாற்கலைஞர் ஆனார். (சூரியன் - பரிதி) நாராயணன் - மால், சாத்திரி—கலைஞர்) சுவாமி வேதாசலம் மறைமலை அடிகள் ஆனார் (வேதம்-மறை, அசலம்-மலை, சுவாமி—அடிகள்)

மேலே குறிப்பிட்டவர்கள் உள்ளிட்ட தமிழறிஞர்களின் தொடர்ச்சியான பணிகள் கரணியமாக (காரணம்) மணிப்பிரவாள நடையிலிருந்து விலகிய நிலை காணப்படுகின்றது.

தவிரவும் வெளிநாட்டவரின் ஆட்சியாலும் ஆங்கிலவழிக் கல்வியாலும் தமிழிலே ஆங்கிலச் சொற்களைப் பெருமளவு கலந்து பேசுவதும் இன்றும் நின்று நிலவுகின்றது. இவ்வாறு கலந்து பேசுவதும் எழுதுவதும் மதிப்பானது என்ற எண்ணம் நம்மிடையே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றையக் கணினி உலகிலே, கணினிக்குக் கூடுதலாக உகந்த மொழி தமிழ் என்று கணினி வல்லார் விதந்து கூறிய பின்னரும் இவ்வாறான கலப்பு மொழிக் கையாளுகை தொடர்ந்து தமிழார்வலர்களை மேன்மேலும் கவலையுறச் செய்கின்றது.

எனினும் பிறமொழி கலக்காமல் பேசவும் எழுதவும் விரும்புகின்றவர்கள் பிறமொழி, தமிழ்மொழி வேறுபாடு காண இயலாமல் இடர்படுகின்ற பிறமொழிச் சொற்களை இனங்கண்டு பொருத்தமான தமிழ்ச் சொற்களில் சிலவற்றைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இக்கட்டுரையின் ஆசிரியர் தமிழில் வல்லமை படைத்தவர் அல்லர். தமிழ் கற்கும் மாணவர்; ஆர்வலர் மட்டுமே. ஆழ்ந்த அறிவும் தமிழ்ப்புலமையுமுள்ளவர்கள் இத்துறையில் முன்னிற்க வேண்டும் என விரும்பி இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

இந்த அடிப்படையிலே நாம் பயன்படுத்துகின்ற கிழமை நாள்களில் இரண்டு நாள்களின் பெயர்கள் வடசொற்களாக - சமற்கிருத சொற்களாக அமைந்துள்ளன. மாதங்கள் பன்னிரண்டிலும் பதினொரு மாதங்களின் பெயர்கள் சமற்கிருதச் சொற்களாக விளங்குகின்றன. ஆகவே கிழமை நாள்கள் இரண்டுக்குரிய தமிழ்ச் சொற்களும் பதினொரு மாதங்களுக்குரிய தமிழ்ச்சொற்களும் தொடர்ந்து 'அ' வில் வரக்கூடிய பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களும் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன.

கிழமை நாள்களில்
புதன் - அறிவன்
சனி - காரி
} தமிழ்ச் சொற்கள்

மாதங்கள்

| | | | |
|---|---|---|---|
| தை | — தை, சுறவம் | ஆடி | — கடகம் |
| மாசி | — கும்பம் | ஆவணி | — மடங்கல் |
| பங்குனி | — மீனம் | புரட்டாதி — கன்னி | |
| சித்திரை | — மேழம் | ஐப்பசி | — துலை |
| வைகாசி | — விடை | கார்த்திகை | — நளி |
| ஆனி | — ஆடவை | மார்கழி | — சிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிற சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| அக்கினி | தீ |
| அங்கவீனம் | உறுப்பறை |
| அசுவதாட்டி | பரிவன்மை |
| அசுவதி/அசுவம் | புரவி |
| அத்திரம் (அஸ்திரம்) | எய்படை |
| அட்டாவதானம் | எண்கவனகம் |
| அதிசயம் | இறும்பூது |
| அதிவியாப்தி | அதிவியன்மை |
| அந்தஸ்து | நிலைமை |
| அந்தம் | முடிவு/ ஈறு |
| அந்தரங்கம் | மறைமுகம் |
| அந்தரம் | மேல்வெளி |
| அந்நியம் | அயல்/ அயன்மை |
| அந்நியோந்நியம் | ஒன்றுக்குளொன்று |
| அநியாயம் | அன்முறை |
| அப்பிராணி/ அப்பாவி | பேதை/ ஏம்போலி |
| அபகரித்தல் | கவர்தல் |
| அபகாரம் | தீமை |
| அபத்தம் | பொய் |
| அபயம் | அடைக்கலம்/ புகல் |
| அபராதம் | குற்றம்/ தண்டம்/ ஒறுப்பு |
| அபிவிருத்தி | பெருவளர்ச்சி |
| அபாண்டம் | அடாவந்தி/ இட்டேற்றம் |
| அபாயம் | ஏதம் |
| அபிஷேகம் | திருமுழுக்கு |
| அபிநயம் | சைகை |
| அபிப்பிராயம் | கருத்து |
| அபிமானம் | நன்மதிப்பு/ நல்லெண்ணம் |
| அபூர்வம் | அருமை |
| அபேட்சை | வேட்பு |
| அபேதம் | வேற்றுமையின்மை |

| பிற சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| அப்பியாசம் | பழக்கம்/ பயிற்சி |
| அம்சம் | கூறு/ உறுப்பு |
| அம்பாரம் | பெருங்குவியல் |
| அம்பிகை | அம்மை/ மலைமகள் |
| அமர பட்சம் | கரும்பக்கம்/ தேய்பிறை |
| அமாவாசை | காருவா |
| அயம் | இரும்பு |
| அர்ச்சனை | வழிபாடு/ பூசனை |
| அர்த்த சாமம் | நள்ளிரவு/ நடுச்சாமம் |
| அர்த்தநாரீசுவரன் | மங்கைபங்கன் / மாதொருபாகன் |
| அர்ப்பணம் | படையல் |
| அருணோதயம் | கதிரவன்எழுச்சி/ பொழுது புறப்பாடு |
| அர்த்தம் /அருத்தம் | பொருள் |
| அருவம் | உருவின்மை |
| அலங்காரம் | அழகு/ புனைவு/ சுவடிப்பு |
| அலட்சியம் | பொருட்படுத்தாமை |
| அல்வா / அலுவா | தேங்கூழ் |
| அவகாசம் | ஓய்வுநேரம்/ தீர்ப்பாடு |
| அவசரம் | விரைநிலை |
| அவசியம் | தேவை |
| அவஸ்தை | நிலை/ வேதனை |
| அவதாரம் | தோற்றரவு |
| அவதி | துன்பம் |
| அவயவம் | உறுப்பு |
| அற்பம் | சிறிது |
| அனுபவம்/ அநுபவம் | நுகர்ச்சி/ பட்டறிவு |
| அனுபோகம்/அநுபோகம் | நுகர்ச்சி |
| அன்னசத்திரம் | ஊட்டுப்புரை/ சத்திரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட முற்றம்

கவிஞர். கந்தவனம் கோணேஸ்வரன் - திருக்கோணமலை

'நம்மட முற்றம்' என்ற நலந்தரு தமிழன் ஏடு
எம்மிடை உலவு தற்கு என்தவம் செய்தம் யாமே
செம்மொழிச் சீர்மை மேலும் சிறக்கவே பணிகள் புரியும்
'நம்மட முற்றம்' என்றே நயந்துவர வேற்போ மாக.

கவிதைகள் கட்டு ரைகள் கருத்துடைச் சிறு கதைகள்
புவிமிசை நிகழும் புதினம் புண்ணியத் தலங்கள் சிறப்பு
சுவையொடு தரவே யென்ற துணிவுடன் முகிழ்க்கும் எங்கள்
அவைபுகழ் அரிய முயற்சி ஆல்என வளர்வ தாமே.

தமிழரின் கல்விச் சிறப்பைத் தனித்துவக் கலையின் வனப்பை
அழகுற அவனி மீதில் அள்ளியே தெளித்து நிற்க
நிமிர்நடை போட்டு எங்கள் 'நம்மட முற்றம்' மலர்ந்து
அமுதமாய் உளத்துட் பாயும் ஆனந்தம் வேறுண் டாமோ.

இருகரம் கொடுப்போ மிங்கே எழுதிடும் மாந்தர்க் கெல்லாம்
வருபுகழ் தமிழுக் கென்றே வாழ்த்தியே நிற்போம் யாமே
ஒருதனி மனித னேனும் ஒதுங்கியே நின்றி டாமல்
திருநிறை மண்ணின் மகவாய்ச் சேர்ந்துநாம் இயங்கு வோமே.

**துளசி கேள்வி பதில்**

கேட்கப்படும் கேள்விக்கு 27.03.2020 ஆம் நாளிற்கு முன்னர் பதிலளிப்பவர்களில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். அனுப்பப்படும் பதிலுடன் "துளசி உணவகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டால் துளசி உணவகத்தில் இலவசமாக "துளசி புரியாணி" ஒன்று மேலதிகமாக கிடைக்கப்பெறும். விடைகள் மின்னஞ்சலிலும் அனுப்பலாம். (thiruk69@gmail.com)

விடை அனுப்ப வேண்டிய கேள்வி.

திருக்கோணமலையின் இசைமேதை இராஜராஜேஸ்வரி அம்மாவின் நூற்றாண்டு விழா எப்போது நடைபெறவுள்ளது?

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

நம்மட முற்றம் - துளசி கேள்வி பதில்
48/116, விநாயகபுரம், கண்டி வீதி, திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம் எங்கே போகிறது?

கவி ரதி
தென்மராட்சி

மண்ணையும் பொன்னாக்கும் பெண்ணினம்
மனிதருள் மாந்தரே பெரும்வரம்
எண்ணிலா ஆசைகள் உலாவரவே
எங்கேயோ போகிறது எம்மினமே

பெண்மை இப்போ பேசும்பொருள்
போதைகள் போல பெண்மை நிலை
கலங்கரை விளக்கானது கற்புநெறி
பெண்ணியகாப்பு எங்கே எங்கே ?

நாகரிகமோகம் நாளும் மாற
நவீனம்புகுந்து ஆளையும் மாற்றுது
கோடாரிக்காம்பாய் ஆணினம் மாற
பிஞ்சும்பூவும்கூட நசுங்கிப் போகுது

பெண்ணே பெண்ணுக்கு எதிரிகளாக
பாரம்பரியம் பண்பாடு காற்றோடுபோக
ஆடைக்குறைப்பும் நுனிநாக்கு பேச்சும்
ஆகுமா பெண்ணேஆடம்பரம் ஏனோ??

கற்புக்கரசிகண்ணகி வாழ்ந்த மண்ணிலே
காற்றிலே பறக்கிறது மானம்
பெண்ணியம் எங்கே போகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகமே பார்த்து வியந்த அந்த போரியல் நடவடிக்கை "ஆப்ரேசன் எண்டபே" என்றும், "ஆபரேசன் தண்டர்போல்ட்" என்றும் "ஆபரேசன் ஜொனதன்" என்றும் அழைக்கப்படுகிறது.

"ஆபரேசன் தண்டர்போல்ட்" பற்றி இணையங்களிலும், நூல்களிலும், ஆங்கில பதிவுகளிலும் வீடியோக்களிலும் வந்திட்ட பதிவினை சுருக்கி, அதனை மீள் பதிவாக்கம் செய்துள்ளார் சென்னையிலுள்ள திரு.பொ.ஜோசப் அவர்கள், அவரின் அநுமதியுடன் இத்தொடர் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

பகுதி : 1

ஜூன் மாதம் 27ஆம் நாள் 1976 ஆம் ஆண்டு. பாரிஸ் விமான நிலையம். சர்வதேசப் புறப்பாடுகள் பகுதி. எயார் பிரான்ஸின் நுழைவுச்சீட்டு ஆய்விடங்களில் (Ckeck-In counter) இஸ்ரேல் செல்லும் விமானத்தில் பயணிக்க வந்திருந்த பயணிகளில் இஸ்ரேலியர்கள், கிரேக்க நாட்டவர்கள், பிரென்சுக்காரர்களும் இருந்தார்கள். இவர்களைத் தவிர மிக சொற்ப எண்ணிக்கையில் வேறு நாட்டவர்கள். வரிசைவரிசையாக பயணிகளாக நின்றிருந்தார்கள்.

எயார் பிரான்ஸின் அந்த குறிப்பிட்ட விமானம் பாரிஸிலிருந்து நேரே இஸ்ரேல் செல்லும் விமானமல்ல. பாரிஸிலிருந்து முதலில் கிரேக்க நகரான ஏதன்ஸ் சென்று, அங்கு ஒரு மணிநேரம் நின்று பயணிகளை இறக்கி ஏற்றிக் கொண்டுதான் இஸ்ரவேல் தலைநகர் "டெல்அவிவ்" செல்லும். அதனால்தான் அதில் கிரேக்க நாட்டவர்களும் அதிகளவில் பயணிக்க வந்திருந்தனர்.

இஸ்ரேலின் டெல்-அவிவ் நகருக்குச் செல்லும் விமானத்துக்கான பயணிகளை உள்ளெடுத்துக் கொண்டிருந்தார்கள் எயார் பிரான்ஸின் விமான நிலைய ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருந்த பயணிகளில் ஒருவருக்கொருவர் சம்பந்தம் இல்லாதது போல, தனித்தனியே இஸ்ரேல் செல்லும் பயணிகளுக்குள் கலந்து ஒரு பெண் உட்பட "நான்கு பேர்" மட்டும், பெரிய திட்டமிட்டலோடு அமர்ந்து இருந்தார்கள்.

இந்த விமான வழிப்பாதையிலுள்ள விசித்திரமான அம்சம் என்ன தெரியுமா? விமானம் புறப்படும் பாரிஸ் விமான நிலையமும், விமானம் போய்ச் சேரும் இஸ்ரேலின் டெல்அவிவ் விமான நிலையமும் பாதுகாப்பு கெடுபிடி நிறைந்தது ஆகும். உலகிலேயே மிக அதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும் விமான நிலையம் இஸ்ரேலின் டெல் அவிவ் விமான நிலையம் ஆகும்.

ஆனால் இந்த இரண்டுக்கும் இடையே விமானம் இறங்கி ஏறப்போகும் ஏதன்ஸ் விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அன்றைய நாளில் மகா மோசம்! அதனை நினைத்துத்தான், கடத்தல் காரர்கள் ஆயுதமின்றி பாரிஸ் விமான நிலயத்தில் பயணத்தை ஆரம்பித்தார்கள்.

## கடத்தல் காரர்களுக்கு ஆயுதம் கை மாறல்

விமானம் முதலாவதாகத் தரையிறங்கிய ஏதென்ஸ் விமான நிலையம். ஏதென்ஸ் வரை பயணம் செய்த பயணிகள் விமானத்திலிருந்து இறங்கிக் கொண்டனர். டெல்அவிவ் செல்லும் பயணிகள் விமானத்துக்கு உள்ளேயே இருந்தனர்.

ஹஏதென்ஸ் விமான நிலையத்தில் நின்றிருந்த விமானத்தில் புதிய பயணிகள் ஏற்றப்படுவதற்கு முன்னர், துப்பரவுப் பணியாளர்கள் மூன்றுபேர் விமானத்துக்குள் ஏறி துப்பரவு செய்தார்கள். அவர்களில் ஒருவர் இறங்குமுன்னர் தன்னிடம் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை விமானத்தில் கழிப்பறை ஒன்றில் மறைத்து வைத்துவிட்டு இறங்கினார். துப்பரவுப் பணியாளர்கள் இறங்கிய உடனேயே விமானத்தின் பின்பகுதியில் அமர்ந்திருந்த ஒருவர் அக்கழிப்பறைக்குச் சென்றார். அவர் திரும்பவும் தனது இருக்கைக்கு வந்தபோது ஆயுதங்கள் அவருடன் வந்து விட்டன.

ஏதென்ஸ் விமான நிலையத்தில் புதியதாய் ஏறிய 58 பயணிகளுடன் மொத்தமாக 246 பேருடன், பெரும்பாலும் யூதர்கள், விமானம் பாரிஸ் நோக்கி 12:20 மணியளவில் கிளம்பியது. வான்வெளி மேகங்களை இரசித்துக்கொண்டும், தங்களின் பயண இலக்கினை எண்ணியும், சந்திக்கப்போகும் உறவுகள், பணிகளை எண்ணியப்படியே பயணிகள் அனைவரும் மகிழ்ச்சிக் கனவில், நடக்கப் போகும் விபரீதம் புரியாது இருந்தார்கள்.

பயணிகளுக்குள் இருந்த நான்கு பேரின் மனதில் மட்டும் தாங்கள் செய்யப்போகும் காரியம் குறித்த ஒத்திகைகளை நடத்திக் கொண்டு இருந்தார்கள். விமானம் பறக்கத் தொடங்கி, எட்டாவது நிமையத்தில், பயணிகளுக்குள் கலந்து இருந்தவர்களில் ஒற்றேகா (**Ortega**), கார்சியா (**Garcia**) என்ற பெயர் கொண்ட பயணிகளும் மற்றும் இரு அராபியர்களும் தமது திட்டத்தினை செயல் படுத்த எழுந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்சியா என்பவன் விமானி இருக்கும் அறை கதவினை உடைத்துக் கொண்டு விமானிகள் பகுதிக்குள் நுழைந்தான். அடுத்த நான்காவது நிமையத்தில், விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதனை ஏதன்ஸ் விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் அறிந்து கொண்டார்கள். விமான நிலைய கட்டுப்பாட்டு அறையில் இருக்கும் அதிகாரிகளுக்கு நொடிப்பொழுதில் விமானத்திற்கு என்ன ஆனதோ என்ற கவலையும், பரபரப்பும் ஒட்டிக்கொண்டது.

விமானத்தின் கட்டுப்பாடு கடத்தல்காரர்களின் கைகளுக்குப் போனது. விமானம் கடத்தப்படுகிறது என்ற தகவலை கடத்தல்காரன் அறிவிக்க சொன்னதன் நிமிர்த்தம் துப்பாக்கி முனையில் வைக்கப்பட்டிருந்த விமானி தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்குத் தெரிவித்தார். விமானத்தை கடத்தியவர்கள் சொல்லியப்படி, கடத்தல்காரர்கள் வாடி ஹாடாட் என்ற பலஸ்தீனிய தீவிர இஸ்லாமிய விடுதலை அமைப்பினர் என்பதையும் அறிவித்தார்.

விமானத்தைக் கடத்தியவர்கள் விஷயம் தெரியாத ஆட்களல்ல. அவர்களுக்கு விமான நகர்வுகள் பற்றி நன்றாகவே தெரிந்திருந்தது. அவர்கள் போய்ச்சேர வேண்டிய இடத்துக்கு (ஆப்பிரிக்கா) செல்வதற்கு விமானத்தில் எரிபொருள் போதுமானதாக இருக்காது என்பதை அறிந்தும் வைத்திருந்தார்கள். அதனால் ஏதென்சில் இருந்து டெல் - அவிவ் இருக்கும் தூரத்தின் அளவிலான தூரத்திலிருக்கும் மற்றுமோர் விமான நிலையத்திற்கு விமானத்தைச் செலுத்தச் செய்வதாக திட்டம் வைத்திருந்தார்கள். அப்படி, அவர்கள் மனதில் வைத்திருந்த நாடு லிபியா. (காரணம் லிபியா இந்தத் தீவிரவாத அமைப்பினர் மீது ஓரளவு பரிவு வைத்திருந்த நாடுகளில் ஒன்று) கடத்தல்காரர்கள் சொல்லிக்கொடுத்தபடி, ஏயார் பிரான்சின் விமானி தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தைக் தொடர்பு கொண்டு விமானத்தைக் கடத்தற்காரர்களின் உத்தரவுப்படி லிபியாவை நோக்கித் திருப்புவதாகத் தெரிவித்தார்.

சிறிது நேரத்தில் லிபியாவின் பெங்காசி விமான நிலையத்தில் இந்த விமானம் தரையிறங்க அனுமதி கொடுக்கப்பட்டது. அங்கே இவர்கள் கேட்டுக் கொண்டபடி விமானத்துக்கு முழுமையாக எரிபொருள் நிரப்ப லிபிய அரசு சம்மதித்தது. இதற்கிடையே ஏயார் பிரான்சின் விமானம் கடத்தப்பட்ட விபரம் வெளியே தெரியவந்துவிட ஊடகவியலாளர்கள் பலர் பெங்காசி விமான நிலையத்துக்கு வந்துவிட்டார்கள். ஆனால் அவர்களில் யாரையும் விமானத்துக்கு அருகே செல்ல லிபியப் பாதுகாப்புப் படையினர் அனுமதிக்கவில்லை.

விமானத்துக்கு எரிபொருள் நிரப்பும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கடத்தல்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த லிபியாவிலிருந்த பிரெஞ்ச் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்களுடன் பேசமுடியாது என்று கடத்தல்காரர்கள் கூறிவிட்டார்கள். இதற்கு இடையில்...... விமானத்திற்குள் ஒரு நாடகம் அரங்கேற ஆரம்பித்தது!

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நம்மட கதை**

# மறைந்து போன மகிழ்ச்சி

**கதிர். திருச்செல்வம், பொற்கேணி, தம்பலகமம்**

"தாயோ தாயோ" என அழைத்துக் கொண்டே நாற்பத்தேழு அகவையான நாகம்மா அவளது அம்மாவின் அண்ணனின் மகளான சாந்தகிளி மச்சாளின் வீட்டிற்கு வந்தாள். "வா மச்சாள் வா" என்று இருப்பதற்கு அவளது வீட்டின் முன்பகுதியிலே வீட்டுச் சுவருடன் இரண்டடி அகலத்தில் ஓர் அடி உயரத்தில் பத்தடி நீளத்திற்கு கட்டப்பட்டிருந்த குந்திலே (திண்ணையிலே) சிறிய பன் பாய் ஒன்றை விரித்தாள்.

"இது எதுக்குடியம்மா எனக்கு. நான் சும்மா இந்தக் குந்தில இருப்பன் தானே" என்று உரிமையுடன் கோபித்துக் கொண்டு மச்சாள் போட்ட பாயை சுருட்டி சுவர் அருகிலே வைத்து விட்டு வெறும் குந்திலே அமர்ந்தாள். அப்போது பின்னேரம் நாலு மணியிருக்கும். வீட்டு முற்றத்திலே மா மரம் கிளைகள் சடைத்து நாளும் நிழலை வழங்கிக் கொண்டிருந்தது. அந்த மா மரத்தின் கீழ் இருந்துதான் அவர்களது குடும்பம் சோற்றுக்கு நெல்லுக் குற்றுதல், காலை உணவிற்கு அரிசி மா தேவையென்றால் அரிசியை மாவாக்க அரிசியை இடித்து வறுத்தல் அது என்னவோ அரிசி இடிப்பதனை மா இடிக்கிறதென்று தான் ஊரில் எல்லோரும் அழைக்கிறார்கள். செத்தல்மிளகாய், மஞ்சள், கோப்பி என்பனவும் உரலில் இடித்தே தமது தேவைக்குப் பயன்படுத்தினார்கள்.

ஒவ்வொரு வியாழனும் மாலையில் நெல்லை இடித்து அவலாக்குவார்கள். அதனை அவல் இடித்தல் என்று அழைப்பார்கள். வெள்ளி காலை உணவாக அவலை உண்பார்கள். முதல்நாள் இடித்த அவலில் தேங்காய்ப் பூவைப் போட்டு அதனுள் சர்க்கரையை சிறிய சீவல்களாக பாக்குவெட்டியால் வெட்டி போட்டு கலந்து பிசைந்து பெரியவர்களுக்கு சாப்பாட்டு தட்டுகளிலும் சிறுவர்களுக்கு கொழுக்கட்டை போன்று பிடித்து கையிலும் கொடுப்பார்கள். காலை உணவு விரைவான சமையலாக இருக்கும்.

"தாயோ என்னடியம்மா முத்தத்தில நாளியும் குட்டானும் கிடக்குது. அதென்ன கவுண்டு போய்க் குப்பறக் கிடக்கு. அத எடுத்து ஒழுங்கா வைக்கல்லயா நீ. ஒரு ஓரத்தில எண்டாலும் வச்சிருக்கலாமே" நாகம்மா மச்சாளைக் கடிந்து கொண்டாள். "மாமா வந்தாரெண்டா இருக்கு உனக்கு. இப்பிடியாடி போடுற எண்டு நல்லாத் தருவார் உனக்கு" என்று தொடர்ந்தாள். "ஓண்டியம்மா இவர் வயலுக்குப் போகக் கொள்ள வண்டில் மாடுகள அவிட்டிற்று வந்தவர். வரக்கொள்ள கூட்டுக்குள்ள அடைச்சி வச்சிருந்த கோழிச்சாவல் சிறக உரத்து அடிச்சுதுகள். அதுகள் நாம்பன் மாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே, வெருண்டு இவரையும் இழுத்திற்று ஓடக்கொள்ள இந்த குட்டான தட்டி விட்டிற்றுதுகள். அதுக்குள்ள தான் நாளியும் இருந்தது. நான் வயலுக்கு சாப்பாடு கட்டிற அவசரத்தில மறந்திட்டனடியம்மா. அதக் கொஞ்சம் நீ எடுத்து அந்த மாட்டு மாலுக்குள்ள இருக்கிற பொட்டகத்துக்கு மேல வச்சு விடன்" அன்பான கட்டளையினை சாந்தகிளி மச்சாள் விடுக்க மறு பேச்சின்றி செய்து முடித்தாள் மச்சாள் நாகம்மா. சற்று நேரத்தில் சொல்லி வைத்தால் போல் நாகம்மாவின் மகள் சந்தானம், சாந்தகிளியின் இன்னொரு மச்சாள் அன்னப்பாக்கியம், பக்கத்து வீட்டில இருக்கும் சின்னம்மா இரத்தினசவுந்தரம் என மூவரும் வந்து சேர்ந்தனர்.

"நாலர மணியாகிற்று கெதியா இடிப்பம்" என அன்னப்பாக்கியம் சொல்ல நாகம்மா சமயலறை ஓரமாக இருந்த உரலை உருட்டி முற்றத்திற்குக் கொண்டு வந்தாள். இரத்தினசவுந்தரம் சமயலறையின் கூரையிலே உள்ள பூட்டுக் கம்புகள் இரண்டிலே இளக்கயிறினால் கட்டி தொங்கவிடப்பட்டிருந்த மூன்று உலக்கைகளை எடுத்து கிணற்றடியிலே கொண்டு போய் கழுவிக்கொண்டு வந்தாள்.

"உலக்கப் பூண நல்லாக் கழுவினியா" மச்சாள் கேட்க "ஓ இவ தான் எனக்கு உலக்க கழுவப் பழக்கணுமாக்கும்" பதிலுரைத்தாள் உலக்கையினை கழுவிய மச்சாள். உலக்கையின் ஒருமுனையில் வெள்ளை நிறத்தில் வெள்ளீயத்தில் இறுக்கமாக வளையமாகப் போட்டிருப்பார்கள். அதனை பூண் என்று அழைப்பார்கள். உலக்கை உரலில் இடிக்கும் போது உடையாமலிருப்பதற்கும் உரலில் இருக்கும் பொருட்களுக்கு உயர் அழுத்தம் கொடுப்பதற்கும் இந்தப் பூண்கள் துணைபுரிந்தன. அவர்களது வயல் அறுவடை இன்று முடிந்துவிட்டது. இரவு சூடு அடிக்க ஆயத்தங்கள் வயலிலே நடைபெற்றுக் கொண்டிருந்தன. இரவு உணவிற்கு பிட்டு அவிப்பதற்கு மா தேவை. மா இடிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சாந்தகிளி வீட்டிற்கு உள்ளே இருந்த இரண்டு சாக்குகளை எடுத்து வந்தாள். அதனை விரித்தாள். அதன் மேலே உரலை உருட்டி வைத்தாள் நாகம்மா. சந்தானம் அடுப்பை மூட்டுவதற்காக விறகினை எடுத்து வந்து போட்டாள். சாந்தகிளி ஊற வைத்த அரிசியைக் கொண்டு வந்து வைத்தாள்.

அன்னப்பாக்கியம், நாகம்மா, இரத்தினசவுந்தரம் மூவரும் உலக்கையைக் கையிலெடுத்தார்கள். சாந்தகிளி அரிசியை அள்ளி உரலில் போட்டாள். அன்னப்பாக்கியம் முதலாவதாக உலக்கையை உரலில் போட்டாள். அவளைத் தொடர்ந்து இரத்தினசவுந்தரமும் அவளைத் தொடர்ந்து நாகம்மாவும் என தொடர்ச்சியாக போட உரலில் கிடந்த ஊற வைத்த அரிசியை பதம் பார்த்தன அவர்கள் மூவரினதும் உலக்கைகள். சற்று நேரத்தில் வலி தாங்காது அரிசிகள் எல்லாம் துண்டாகி மாவாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி இடிக்கின்ற போது மூவரும் ஒருவிதமான "ஸ்கூ ஸ்கூ" என்ற ஒலியுடன் உலக்கையினால் உரலில் இடித்தார்கள். அதிக விசையினைப் பிரயோகிக்கும் உத்தி போல அது. இடிக்கின்ற போது ஒவ்வொருவரினதும் முகமும் சிரிப்புடனும் சாந்தகிளியின் கிண்டல் பேச்சினால் காணப்பட்டது. முதலாவது போடப்பட்ட அரிசியினை மாவாக சாந்தகிளியின் அருகிலே இருந்த சட்டியிலே அள்ளி போட்டாள் அன்னப்பாக்கியம். அடுத்த தடவை இடிப்பதற்கான அரிசியினை உரலிலே அள்ளிப் போட்டு இடித்தார்கள்.

இடித்த மாவினை சாந்தகிளி அரிதட்டில் போட்டு அரித்தாள். இவ்வாறு அரித்த மாவினை சந்தானம் அடுப்பிலே இருந்த தாச்சியிலே போட்டு வறுக்கத் தொடங்கினாள். யாரும் யாருக்கும் வேலைகள் சொல்லவில்லை. யாரும் யாருக்கும் தலைவராகவும் இருக்கவில்லை. ஆனால் அவரவர் வேலையினை எதுவித தவறுமின்றி செய்து கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு செய்வதனால் தானோ என்னவோ அவர்களிடையே மகிழ்ச்சியான வாழ்வு நிலையாக இருந்தது. உடல்நலம் சிறப்பாக இருந்ததனால் நோய்கள் அவர்களுக்கு அருகிலும் வரவேயில்லை.

"அந்த சண்டாளச்சிய பாத்தியா தாயோ" சாந்தகிளி

"ஆரடி" நாகம்மா

"அவள் தான் நற்சிங்கத்தாற்ற செல்லப்பாக்கியத்த தான், நேற்று பாக்கிறன் சனியன் சோட்டியோட கடைக்கு வாறாள். வெக்கமில்லயா அவளுக்கு. பாக்கிற ஆக்கள் என்ன சொல்லுவாங்க. எனக்கு அவளப் பாக்க வெக்கமா போயிற்று. நான் வீட்டுக்குள்ள ஓடி வந்திற்றன் தெரியுமா" என சாந்தகிளி கூற குபீர் என எல்லோரும் சிரித்தே விட்டனர்.

"அதுக்கேண்டி நீ ஒளிக்கிறா. அவளே வெக்கப்படல்ல. உனக்கென்ன கிடக்கு" நாகம்மா.

"இல்லடி தமிழ் ஆக்கள்ற பண்பாடு இப்பிடி வீதியில திரிஞ்சா என்னடி ஆகும். சொல்லு பாப்பம். நாம எப்ப எண்டாலும் சீல உடுக்காம வெளியில வந்திருக்கமா. கலியாணம் கட்டின பிறகு சோட்டியோ சட்டையோ இல்லாட்டி மினிஸ்கேற்றோ போட்டிருக்கமா?"

"அதெண்டா சரிதான்" இது அன்னப்பாக்கியம்.

கடந்த காலங்களை மனதில் எண்ணிக் கொண்டு தன் அப்பாவி மச்சாளை எண்ணியவளாக "பொக்குக்வாய்க் கிளவி" என்ற தன் பேரக் குழந்தைகளின் பட்டப்பெயருடன் மகிழ்ச்சியைத் தொலைத்துக் கொண்டிருக்கும் நிம்மதியை காசு கொடுத்தாலும் வாங்கிக் கொள்ள முடியாத நிலையிலிருக்கும் தன் பிள்ளைகளை எண்ணிக் கொண்டு "இப்ப எல்லாம் சாந்தகிளி மச்சாள் இருந்திருந்தா தொடைக்கு மேலே நம்மட பிள்ளைகள் போடும் உடைகளைப் பார்த்து சாவடைந்திருப்பாள் அல்லது பூட்டிய வீட்டினுள் அடைபட்டுக் காலம் கழித்திருப்பாள்" என மனம் நொந்து கவலைப்பட்டுக் கொண்டேயிருந்தாள் நாகம்மா என்ற சாந்தகிளியன் மச்சாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவோம் சட்டம்

## குற்றம் எண்பிக்கப்படும் வரை அனைவரும் சுத்தவாளிகளே!!!

சட்டவாளர் சபருள்ளா, கிண்ணியா

இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 13(5) அனைவருக்குமான கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய வகைக்குள்ளேயே வருகின்றது. அதுவும் சமகால நச்சுச் சூழலில். பின்வருமாறு அது ஏற்பாடு செய்கின்றது.

"Every person shall be presumed innocent until he is proved guilty: Provided that the burden of proving particular facts may( by law) be placed on an accused person". அதாவது எந்தவொரு நபரும் அவருக்கெதிராக கொண்டு வரப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுகள் (Charges) எண்பிக்கப்படும் வரை அவர் சுத்தவாளியென ஊகம் கொள்ளப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்கின்றது. ஆங்கிலத்தில் "shall" என இந்த உறுப்புரையில் பயன்படுத்தப்படுவது "கட்டாயமானது" எனப் பொருள் கொள்ள வேண்டும்.

இதுவே குற்றவியல் சட்டத்தின் (Criminal Law System) அரசியலமைப்பு அடிப்படை. மூலாதாரம்... அடிப்படை அறம்...அடிப்படைத் தர்மம். சிறிய திருட்டு தொடக்கம் பிச்சுவாக் கத்திக் கொலைக் குற்றம் வரை இதுதான் மூலம். ஒரு நாட்டின் தாய்ச் சட்டமானது (Mother Law) அரசியலமைப்பே. குற்றவியல் சட்டத்தைப் பொறுத்தவரை இந்த ஏற்பாட்டினை செய்வதானது அத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சாதாரண நாடாளுமன்ற நியதிச்சட்டம் (Statutes) கூட இந்த ஏற்பாட்டினைச் செய்யவில்லை என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

யாரேனும் ஒருவர் குற்றமொன்று தொடர்பில் ஐயத்தின் பேரில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டு காவல்துறையினரால் புலன்விசாரணைகளில் அவர்களால் சேகரம் செய்யப்பட்ட குற்றத்தை நிரூபிக்கக் கூடிய சான்றுகளின் சாட்சிகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட ஐயத்திற்குரிய நபருக்கெதிராக குற்றப்பத்திரிகை அல்லது குற்றப்பகர்வுப் பத்திரம் (Charge Sheet or Indictment) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் வழக்கானது விளக்கத்துக்கு (Trial) எடுக்கப்பட்டு வழக்கு முடியும் வரைக்கும் சட்டத்தைப் பொறுத்த வரை குற்றம் சாட்டப்பட்ட நபர் (Accused) சுத்தவாளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்தான் குற்றத்தை செய்திருப்பார்,……இவர்தான் குற்றத்தை செய்த குற்றவாளி, இவனேதான் ஆள் என்றெல்லாம் யாரும் எவரும் அவருக்கெதிராக எதுவுமே சொல்லி விட முடியாது. வழக்கு விளக்கம் நீதிமன்றத்தில் முடியும் வரைக்கும் அவர் சுத்தவாளியென்றே ஊகம் கொள்ளப்பட வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கினை விளக்கத்தின் போது தீர்ப்பு வழங்குவதற்காக செவிமடுக்கின்ற நீதிபதி கூட அவர் தொடர்பில் இந்தப் பாவிதான் குற்றத்தை செய்திருக்கின்றான் என்று சாடை மாடையாகக் கூட திறந்த நீதிமன்றத்தில் எதுவித குறிப்புகளையும் ஆக்க முடியாது.

குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு சட்டம் வழங்குகின்ற அனைத்து வித உரிமைகளையும் வழக்கு விளக்கத்தின் போது வழங்க வேண்டும். எடுத்துக்காட்டாக அரச தரப்பு வழக்கு விளக்கத்தின் (Prosecution Trial) போது அரச சாட்சிகளை (Witnesses for the prosecution) அவருக்கு குறுக்கு விசாரணை செய்ய முழு அதிகாரமும் இருக்கின்றது. அதே நேரம் அவர் சார்பான எதிர்த்தரப்பு விளக்கத்தின் போது (Defence Trial) அவர் தன் வாய் திறந்து சாட்சி சொல்லலாம் அல்லது சொல்லாமல் விடலாம். அது அவருக்குள்ள முழுச் சுதந்திரமும் உரிமையும் ஆகும்.

தன் சார்பாக சாட்சி வழங்க தான் விரும்புகின்ற நபர்களை சாட்சியாளர்களாக நீதிமன்றத்துக்கு கொண்டு வரலாம். குற்றவாளிக் கூண்டிலிருந்து அவர் சாட்சி சொல்லலாம். அவ்வாறு சாட்சி சொல்லுகின்ற போது அவரை அரச தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முடியாது. இதனை சட்டத்தில் "குற்றவாளிக்கூண்டு வாக்குமூலம்" (Dock Statement) என்பார்கள். அதே போல சாட்சிக் கூண்டிலிருந்தவாறு அவர் சாட்சி சொல்லாம். இந்த நேரம் அவரை அரச தரப்பு குறுக்கு விசாரணை செய்யும். மேற் பராக்களில் குற்றம் சாட்டப்பட்டவருக்குள்ள உரிமைகளில் ஒன்றேனும் மீறப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அது எமது அரசியலமைப்பின் உறுப்புரை 13(3) இன் மிகப் பெரும் மீறலாகும்.

பிரிவு 13 (03) இன் படி "Any person charged with an offence shall be entitled to be heard, in person or by an attorney-at-law, at a fair trial by a competent court" அதாகப்பட்டது குற்றமொன்றுக்காக குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அவராகவோ அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாகவோ தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றின் மூலம் நீதி நியாயமான (Fair Trial) வழக்கு விளக்கமொன்றில் கேட்கப்படுவதற்கு உரித்துடையவர்" என ஏற்பாடு செய்கின்றது. இங்கு நீதியான விசாரணை அல்லது விளக்கம் என்பது மிக முக்கியமானதாகும்.

மேற் சொன்னவற்றில் ஒன்றேனும் குற்றம் சாட்டப்பட்ட எதிரிக்கு மறுக்கப்படுகின்ற போது, அது நீதியான வழக்கு விசாரணை என்கின்ற அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை மீறப்படுவதாகும். இது ஒன்றே போதுமானது, அந்த எதிரிக்கெதிராக நடாத்தப்பட்ட வழக்கு விளக்கம் ரத்து செய்யப்படுவதற்கு. தவிரவும் குற்றவியல் வழக்குகளில் குறித்த நபருக்கெதிராக கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டை வழக்குத் தொடுனரே எண்பிக்க வேண்டும். எண்பிக்க வேண்டிய தராதரம் "நியாயமான ஐயத்துக்கப்பால்" (Beyond Reasonable Doubt) என்பதாகும். நூறு விழுக்காடு நியாயமான ஐயத்துக்கப்பால் எண்பிக்க வேண்டுமென்ற தராதரத்தில் கொஞ்சம் பிசகினாலும் ஐயத்தின் பலன் (Benefit of Doubt) எதிரிக்கு கொடுக்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்படுவார்.

இத்தனை விடயங்களையும் நாட்டின் தாய்ச்சட்டமான அரசியலமைப்பே அடிப்படை உரிமைகளாக ஏற்பாடு செய்கின்றது. யாப்பினை மதிக்க வேண்டியது அரசினதும் அது போல அரச நிறுவனங்களினதும் பொது சனங்களினதும் மிகப் பெரும் பொறுப்பும் கடமையுமாகும். அடிப்படை உரிமைகளை மீறுகின்ற விதமாக அரசின் எந்தக் கூறும் நடக்க முடியாது. அதற்கான அதிகாரமும் யாருக்கும் கிடையாது. அவ்வாறு அந்த அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற பட்சத்தில் பாதிக்கப்பட்டவர் யாப்பின் உறுப்புரை 126 இன் கீழ் உச்ச நீதிமன்றத்துக்கு முறையிடலாம். உச்ச நீதிமன்றம் பிரஜைகளின் அடிப்படை உரிமை மீறல்களின் காவல் கூடமாகும்.

இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் இதே நிலைதான். தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படுகின்ற வழக்கு விளக்கத்தில் முறையாக நியாயமான வழக்கு விளக்கம் நடாத்தப்பட்டு இறுதியாக கைது செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளியென நீதிமன்றம் தீர்ப்பு சொல்லும் வரைக்கும் குற்றம் சுமத்தப்பட்ட எல்லாருமே சட்டத்தின் பார்வையில் குற்றம் செய்யாதவர்களே. வன்புணர்வாகிலும் சரி கொலையாகிலும் சரி எல்லாவற்றுக்கும் சட்டம் ஒன்றே.

இந்த நிலையில் ஐயத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் கொண்டு வரப்படுகின்றவர்களை அவர்கள்தான் குற்றவாளிகள் என்ற நிலையில் அவர்களை நடாத்துவதும் ஊடகங்கள் எழுதித் தள்ளுவதும் அடிப்படைஉரிமை மீறல் என்பதோடு மகா குற்றமுமாகும். இப்படியானதோர் நிலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை குற்றம் நடந்த இடத்துக்கு கூட்டி வந்து தப்பிக்க முயன்றார்கள் என்று குழந்தைத்தனமான காரணங்களை சொல்லி எதிர்ப்படுதல்(என்கவுண்டர்) செய்வதெல்லாம் மரண தண்டனையால் தண்டிக்கப்படக் கூடிய படுகொலைகள் மட்டுமல்ல... அதற்கும் மேலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதிகளிறங்கும் காலம்

கவிஞர்.ப. சுஜந்தன், சம்பூர்

உயிருகி நீராய் உருப்பட்டு
ஒரு நாளில் என் நதிகள் இறங்கும்
எரிமலையின் சீற்றமாய் இருக்கும்
முகமொன்றில் அது புறப்படலாம்

விறு விறுவென வீரியத்துடன்
கூர்ப்பாறைகள் சிதைய
மஞ்சள் நீலம் பச்சை சிவப்பாய்
என நதிகள் இறங்கும்

நானும் இறங்குவேன்
இருண்ட சிலுவையிலிருந்தும்
இடித்த சிறைகளிலிருந்தும்
நான் இறங்கும் போது
நீயும் இறங்கிக்கொள்

மண் அணைகளையும்
முட்கம்பிகளையும்
நான் உடைக்கும் போது
நீயும் உடைத்துக் கொள்
இறங்கும் நம் நதியில்
அழுகிப்போன எமது மானத்தை
கழுவிக் கொள்வோம்

உந்தி வீழும் நதியில்
நிலம் பிளக்கும் குருத்து
மணல் பாயும்
நிலப் பிளவுகளிலிருந்து
நம் தொன்மத்தையும்
மூதாதயரின் சொற்களையும்
கல்லறைகளையும்
நான் பொறுக்குவேன்

நீயும் பொறுக்கிக் கொள்
நிலத்தின் அடியில்
உறைந்து போன
ஒரு தேசிய கீதம்
துடித்துக்கொண்டிருக்கும்
அதையும் அள்ளியெடு

விறு விறுவென
நதியிறங்கும் காலத்தில்
சிலுவையிலிருந்தும்
சிறைகளிலிருந்தும்
நான் இறங்குவேன்
மறக்காது நீயும் இறங்கிக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையின் இளைய தலைமுறையும் இலக்கிய ஆளுமைகளும்

திருமலை.நவம்

இலக்கியத்தில் ஆளுமை மிக்கவர்கள் என்பது இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே பேசப்படுபவர்களாக இருந்துள்ளார்கள். தென் மதுரையில் அமைத்த முதற் சங்கத்தில் அகத்தியர், முடிநாகராயர் முதலிய புலவர்களும் இடைச்சங்கத்தில், தொல்காப்பியர் வள்ளுர்க்காப்பியனும், கடைச்சங்கத்தில் நக்கீரர், கபிலர், பரணர் போன்ற ஆளுமைமிக்க புலவர்கள் இருந்தார்கள் என்றும் வரலாற்றில் படித்திருக்கிறோம். அதே போன்று நவீன இலக்கிய வடிவங்கள் தமிழுக்கு அறிமுகமாகிய காலத்தில், சிறுகதை மன்னர்களும் நாவல் விற்பன்னர்களும் விமர்சன மேதைகளும் ஆளுமை கொண்டவர்களாக பார்க்கப்பட்டார்கள்.

நவீன வடிவங்கள் தமிழுக்கு அறிமுகமாகிய போது பழந்தமிழ் அல்லது புலமைசார் சான்றோர்களிடமிருந்து இலக்கிய வடிவங்கள் இளைய தலைமுறைக்கு கைமாறிக் கொண்டன. குறிப்பாக சிறுகதை, நாவல் வடிவங்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். 1960 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து கவிதையில் புதிய வடிவமான "புதுக்கவிதை" வடிவம் அறிமுகமாகிய காலத்தில் இளைய தலைமுறையினர் மரபு வடிவங்களை உடைத்துக் கொண்டு கவிதைகள் எழுத ஓடிவந்தார்கள். இது "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற மாற்றத்துக்கான குறிகாட்டியாக இருந்தது.

திருக்கோணமலை மாவட்டத்தில் கோணேசர் பாரம்பரியத்தை அடியொற்றி 19ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலேயே இத்தகைய புதிய வடிவங்களை ஆக்கும் ஆர்வம் கொண்டவர்களாக எஸ்.இன்னாசித்தம்பி, பண்டிதர் சரவணமுத்துப்பிள்ளை நாடகத்துறையில் தம்பிமுத்து என்பவர்கள் ஆரம்பகால முன்னோடிகளாக விளங்கினார்கள். சரவணமுத்துப்பிள்ளை அவரது சகோதரர் கனகசுந்தரம்பிள்ளை போன்றவர்கள் சிறந்த இலக்கிய ஆளுமைகளாக விளங்கினார்கள். இதன் பின் புதிய தலைமுறைகள் திருக்கோணமலையில் தலைதூக்கத் தொடங்கிய காலம் 1950 ஆம் ஆண்டையொட்டிய காலம். தருமுசிவராமு, (1939-1997) கவிஞர் அண்ணல் (1930-1974) திருக்கோணமலைக் கவிராயர் (1930-1990) வ.அ.இராசரத்தினம், தி.அரியநாயகம், ந.பாலேஸ்வரி, தா.பி.சுப்பிரமணியம் அருள்சுப்பிரமணியம் போன்ற ஆளுமைகள் 1980 ஆம் ஆண்டுவரை பல்வேறு வடிவில் திருமலை இலக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆம் ஆண்டுக்குப்பின் குறிப்பாக ஈழப்போர் மௌனப்படுத்தப்பட்டதாக அரசாங்கம் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் நிலையில் திருக்கோணமலை மாவட்ட இலக்கியத்தில் இளைய தலைமுறையினரின் வருகை அதிகமாவே இருந்துவந்துள்ளது அதிலும் "புதுக்கவிதை" வடிவக் கவிதைகளை ஆராதித்தவர்களே அதிகம். குறிப்பாக 2010 ஆம் ஆண்டுக்கும் 2019 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் புதுக்கவிதைகள், சிறுவர் பாடல்கள், காவியங்கள் என பெருமளவு நூல்கள் வெளிவந்துள்ளன. சிறுகதை, நாவல் என்பன விரல் விட்டு எண்ணக்கூடியவையே வெளிவந்துள்ளன. புதிய தலைமுறைக்கு முன்னைய தலைமுறையினரே சிறுகதை, நாவல் போன்றவற்றில் சின்ன அளவில் ஆர்வம் காட்டியுள்ளனர். இந்த வெளியீடுகள் அல்லது ஆக்கங்கள் தாங்கிவந்த கருவடிவங்கள் பெரும்பாலும் சமூகத்தின் மடியிலிருந்து பிறந்தவைகள். அருந்தன்மை கொண்டதாகவே காணப்படுகிறது.

அநேகமான நூல் வெளியீடுகளில் சொல்லப்பட்ட வியாக்கியானங்களை வைத்துக்கொண்டு பார்ப்பின் வித்துவச் செருக்கும் ஜால வித்தைகளும் சொற்சிலம்பங்களும் அவற்றில் குதித்து விளையாடுவதையே காணுகின்றோம். போர்க்காலம் உடைந்துபோன சமூகப்பெறுமானங்கள், இழப்புக்கள், துன்பங்கள், போர் முனைப்புக்கள், கெடுதிகள் எங்கோ ஒரு மூலையில் அடைகாக்கப் பட்டிருக்கிறதே தவிர பொரி நிலை பெறவில்லையென்பது கவலை தரும் விடயமே.

இப்பொழுதெல்லாம் திருக்கோணமலை மண்ணில் வரலாற்று ஆய்வாளர்கள் மரபுரிமை பேணிகள், கவிதா பாடிகள் நிறையவே பிரமயோகம் பெற்றுள்ளனர். இருந்த போதிலும் மூத்தோரை மதிப்பது, முன்னையோரை கனம்பண்ணுவது போன்ற மரபுவழக்குக்களைப் பேணுவது, கடைப்பிடிப்பதை காணுவதே கஸ்டமாகவுள்ளது. திருக்கோணமலை இலக்கியத்தை ஒருதேசியத்தரத்துக்கு கொண்டு செல்லும் தகமையுடைய இலக்கியங்களை ஆக்கவேண்டுமென்ற தூரப்பட்ட சிந்தனையற்றவற்றை ஆக்கிவிட்டு குண்டான் சட்டிக்குள் குதிரையோடும் பிரகிருதிகளாகவே நமது புதிய தலைமுறைக்காரர்கள் காணப்படுகிறார்கள்.

போர் இலக்கியம் பற்றியும் புலம் பெயர் எழுத்தாளர் பற்றியும் வன்னிசமர் பற்றியும் மற்றவர் கூறியவற்றை பெருமைப்பட பேச நினைக்கிறோமே தவிர இந்த மண்ணில் வாழ்வியல் அனர்த்தங்களை வண்ணங்களை பிறர் பேசவைக்கும் இலக்கியங்களை ஆக்க முயற்சி செய்கிறோமா வெனில் இல்லை. சாஹித்திய மண்டலத்தை அளவு கோலாகக் கொண்டு அதற்குள் முடங்கியே போகிறோம். இப்பொழுதெல்லாம் சாஹித்திய மண்டலப் பரிசு என்பது சொந்தக்காரருக்கும் பணம் பரிமாற்றுபவர்களுக்குமுரிய பாராட்டு சான்றிதழாகப் போய்விட்டது என்பதை ஏன் தான் கண்டு கொள்ள மறுக்கிறோமோ தெரியாது.

அண்மையில் ஒரு மேடையில் பேராசிரியர் ஒருவர் ஓர் இளைஞனை மூத்த பேராசிரியருடன் ஒப்பிட்டுப் புகழ்பாடினார். அந்த மூத்த பேராசிரியர் ஆயிரம் ஆயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைகளை உருவாக்கியவர். இந்தப்பேராசிரியர் தனக்குப் பின் பேர் சொல்லக்கூடிய தனியொரு ஆளுமையை உருவாக்கியிருக்கிறாரோ என்றால் அதுகேள்விக்குறி. இலக்கிய நூல்களுக்கு முன்னுரை எழுதுகிறவர்களும் விமர்சன உரை நிகழ்த்துகிறவர்களும் வெளியீட்டுரை செய்பவர்களும் ஒருவரி வசனத்தை இலக்கியத்தில் படித்துக் கொள்ளாதவர்களெல்லாம் மேடையலங்காரத்துக்காகவும் மதிப்புக்காகவும் அழைத்து வரப்படுகிறார்கள்.

சில வேளைகளில் மாணவர்களுக்கு பயிற்சிபட்டறையும் இவர்களால் நடாத்தி வைக்கப்படுகிறது. இது எப்படியென்றால் ஊமையன் ஒருவர் பட்டிமன்றத்துக்கு தலைமை தாங்குவது போல் கற்பனை செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்கள் ஈழத்து இலக்கியப் பரப்பில் இன்னும் கூறுவதனால் தமிழ் கூறும் நல்லுலகத்தால் சிறந்த ஆளுமைகளாக மதிக்கப்பட்டவர்கள் தான். ஆனால் அவர்கள் திருக்கோணமலை எழுத்தாளர்களை தங்கள் கவனத்துக்குள் உள்வாங்கவில்லையென்பது கவலைப்பட்டுபோன விடயம். மிக மிக சின்ன அளவில் வ.அ.இராசரத்தினம், தருமு.சிவராமு போன்ற ஆளுமைகளை ஏற்றுக்கொண்டது கூட போதியளவாக இருக்கவில்லை. அதற்கு ஆயிரம் காரணம் இருந்தாலும் இதுதான் உண்மை.

இன்றைய இளம் தலைமுறையினர் தங்களை சுதாகரித்துக் கொள்வது மாத்திரமல்ல தேசிய தரம்மிக்க இலக்கியங்களை தமிழ் இலக்கியத்துக்கு ஆக்கித்தர தம்மை ஆளுமை கொண்டவர்களாக ஆக்க வேண்டும், பூகோளமாற்றங்களை, பின் நவீனத்துவ தத்துவங்களை பேசிக்கொண்டிருப்பதை தங்கள் பிரசங்கங்களாக கொள்ளாமல் இந்த மண்ணின் மக்களை மாற்றுத் தளத்துக்குக் கொண்டு செல்லக்கூடிய ஆற்றல், பட்டறிவு, ஆழம் நிறைந்த இலக்கியங்களை ஆக்கி தரவேண்டியதே காலத்தின் தேவையாகும்.

சித்திரை இதழில் மாணவர் பக்கம், மருத்துவக் குறிப்புகள், சமையல் குறிப்புகள் என்பன இடம்பெறவுள்ளன. அத்துடன் குட்டிக்கதைகள், தகவல்கள், கவிதைகள் போன்ற ஆக்கங்களையும் விருப்பமுள்ளவர்கள் எமக்கு எழுதி அனுப்பலாம். தமது ஆக்கங்களை

நம்மட முற்றம்,
48/116, விநாயகபுரம்,
கண்டி வீதி,
திருக்கோணமலை.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அல்லது thiruk69@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேனையூர் பள்ளியின் ஆரம்பம்

திரு.வி.நவரெத்தினராஜா, ஓய்வுநிலை அதிபர், சேனையூர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதி ஆண்டுகள் இப்பாடசாலையின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. ஏனென்றால் இக் காலப்பகுதியில் திருக்கோணமலையில் மட்டுமல்ல அகில இலங்கை ரீதியிலும் பேர் பெற்ற பாடசாலையாக இப் பாடசாலை திகழ்ந்தது. திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள அனேக ஊர்களில் இருந்தெல்லாம் இப் பள்ளிக்குப் பல மாணவர்கள் வந்து தங்கி நின்று கல்வி கற்ற வரலாறு மகத்தானது.

திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கில் உப்பாறு சூழ்ந்திருக்க தென்னஞ்சோலைகளின் நடுவே அழகுற அமைந்த கவினுறு பாடசாலை தான் இது. மருதம் மலர்ந்திருக்க நெய்தலும் கலந்தாட வருகின்ற தென்றலுடன் முல்லையின் மணம் வீச காற்றோட்டமான விசாலமான இடத்தில் அமைந்த அழகு தவழும் பாடசாலை இது.

பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் புதிய நாடுகளைக் கண்டுபிடித்து செல்வத்தைச் சேர்க்கும் விதத்தில் புறப்பட்ட ஐரோப்பிய நாடுகள் கீழைத்தேய நாடுகளில் கால் பதித்தன. செல்வத்தை சேர்ப்பது மட்டுமல்லாது அங்கு குடியேறி தமது பண்பாட்டை விதைக்கும் இடமாகவும் அதனை மாற்றுவது அவர்கள் குறிக்கோளாக இருந்தது.

1796 இல் இலங்கையைக் கைப்பற்றிய பிரித்தானியர் 150 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையை ஆண்டனர். இவர்கள் காலத்திலே தான் மிசனரி பாடசாலைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன.

1814 இல் மட்டக்களப்பு மெதடிஸ்த மகளிர் பாடசாலையும்
1819 இல் திருக்கோணமலை மெதடிஸ்த மகளிர் பாடசாலையும்
1820 இல் மட்டகளப்பு வின்சட் மகளிர் பாடசாலையும்
1823 இல் திருக்கோணமலை பெருந்தெரு மிசன் பாடசாலையும்
1838 இல் கட்டைப்பறிச்சானில் சேனையூர் மெதடிஸ்த மிசன் பாடசாலையும்
1865 இல் மூதூர் புனித அந்தோனியார் வித்தியலயமும் ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்புக்கள் உள்ளன.

1838 இல் ஆரம்பிக்கப்பட்ட கட்டைபறிச்சான் விபுலாந்த வித்தியாலயத்தில் தரம் 5 வரை மட்டுமே வகுப்புக்கள் இருந்தன. ஆனால் 1865இல் ஆரம்பிக்கப்பட்ட மூதூர் புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் 10ம் தரம் வரை வகுப்புக்கள் இருந்தன. அதற்கேற்ற ஆசிரியர்களும் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் பிரதேசமெங்கும் கல்விப் பயிர் வளர வித்திடப்பட்ட இடம் இந்த மூதூர் புனித அந்தோனியார் பாடசாலை தான். கிறிஸ்தவ மக்கள் மட்டுமல்லாது இப்பகுதியைச் சூழ உள்ள தமிழ் முஸ்லீம் மக்களும் இப்பாடசாலையால் பயன் பெற்றனர். கூனித்தீவு, சம்பூர், சேனையூர், கட்டைப்பறிச்சான், கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு போன்ற ஊர்களிலிருந்து மூதூர் வந்து கல்வி கற்ற கல்விச் சிந்தனையாளர்கள் தங்கள் ஊர்களிலும் பாடசாலையை உருவாக்கி கல்விப்பயிர் வளர்க்கத் தொடங்கினர்.

மிசனரி பள்ளிகளில் மதமாற்றங்களும் இடம் பெற்றதாகப் கூறப்பட்டது. வேற்று மதகொள்கைகளும் போதிக்கப்பட்டன. அத்துடன் சிறப்பாக கல்வி கற்று மதம் மாறியவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்பும் உத்தியோகமும் கூடிய சம்பளமும் வழங்கப்பட்டன.

மேலும் 1948 ஆண்டு இலங்கை விடுதலை அடைந்த பின் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டதால் சுயமொழிப் பாடசாலைகள் உருவாகக் கூடிய சூழ்நிலைகளும் ஏற்பட்டன. இச் சந்தர்ப்பத்திலேதான் மத மாற்றத்தை விரும்பாத பெரியவர்களின் மனதில் சைவப் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணங்கள் தோன்றின. சேனையூர், கட்டைபறிச்சானில் ஆற்றுக்கரை ஓரங்களில் மட்டுமே அக்காலத்தில் குடியிருப்பு காணப்பட்டது. ஊருக்கு மத்தியில் அதாவது தற்போதைய 7ஆம் வாட்டார பிரதேசம் பெருங்காடாகக் காணப்பட்டது.

அந்நாளில் இக் காட்டினுள் மான், மரை, பன்றி வேட்டை ஆடியதான கதைகளுமுண்டு. இக்காட்டினூடாக வண்டிப்பாதை போன்ற ஒற்றையடிப் பாதையினூடாக கட்டைப்பறிச்சான் துறையை வள்ளத்தில் கடந்துதான் மூதூர் செல்லவேண்டியிருந்தது. மழைக்காலங்களில் நீர் நிறைந்திருக்கின்ற கேணிகளைக் கடந்தும் பாடசாலை மாணவர்கள் மூதூருக்கு செல்ல வேண்டியிருந்தது. ஒரு சிலரிடம் மட்டுமே ஈருளி இருந்தது. மற்ற மாணவர்கள் கஸ்டத்துடன் நடந்துதான் செல்ல வேண்டியிருந்தது.

இத்தகைய காரணங்களும் சேனையூர் பகுதியில் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய எண்ணம் இவர்களிடம் ஏற்படக் காரணமாயிருந்தது.

அந்த வகையிலே தான் சேனையூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கும் கால்கோளிடப்பட்டது. இந் நிகழ்வு வெற்றி பெறுவதற்கு சேனையூர் கிராமத்தில் இரண்டு பேர் முக்கிய காரணமாக இருந்திருக்கிறார்கள். ஒருவர் திரு.க.நா. நடராஜபிள்ளை உடையார் அவர்கள். மற்றவர் திரு.ஆ கணபதிப்பிள்ளை அவர்கள்.

திரு.க.நா.நடராஜபிள்ளை அவர்கள். யாழ்பாணத்தில் ஆங்கிலத்தில் கல்வி கற்றவர். பிரித்தானிய மெற்றிக் குலேசன் பரீட்சை அப்போது கொழும்பில் நடைப்பெற்றது. கொழும்பு சென்று அப்பரீட்சையை எழுதி சித்தி அடைந்தார்.

மூதூர் பிரதேசத்தின் அரச பிரதிநிதியாக உடையராக அரசால் நியமிக்கப்பட்டவர். பிறப்பு இறப்பு பதிவாளராக, காணிப் பதிவாளராக, பொலிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானாக, பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குபவராக, வரி வசூலிப்பவராக என பல பொறுப்புக்களுடன் பதவி வகித்தார். வருடத்துக்கு இரண்டு முறை ஊர் மக்களுக்கு அமுது கொடுத்து வந்தவர். இவரின்றி ஊரில் எந்த பொது நிகழ்வும் நடைபெறமுடியாதளவிற்கு செல்வாக்குடையவராக இருந்தார். வெருகல் முருகன் கோயிலின் அறங்காவலராகவும் இவர் செயற்பட்டார்.

திரு. ஆ. கணபதிப்பிள்ளை அவர்கள் கிராமசபைத் தலைவராக இருந்தவர் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் ஆங்கிலத்தில் கல்வி கற்றவர். திருக்கோணமலை கடற்படைத் தளத்தில் பல வருடங்களாக மேலாளராகக் கடமை ஆற்றியவர்.

தனிப்பட்ட காரணங்களால் அந்த வேலையையும் விட்டுவிட்டு ஊருக்கு வந்து பரம்பரைத் தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டார். இலங்கையில் உள்ளூராட்சி முறைகள் வந்த போது இவர் கிராமச்சபைத் தலைவராக ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரிடம் ஓர் ஒற்றை மாட்டு வண்டி இருந்தது. கூடாரம் கட்டிய இவ்வண்டியிலேதான் இவர் எப்போதும் பயணம் செய்வார். இவர் காலத்திலேதான் கட்டைபறிச்சான் கிராமசபை கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அமைப்பதற்கான குழுவின் தலைவராக இவரே இருந்து செயற்பட்டார். செயலாளராக திரு.க.மார்க்கண்டு அவர்களும் பொருளாளராக திரு.சு.தங்கத்துரை அவர்களும் பாடசாலையை அமைப்பதற்கான கூட்டத்தில் வைத்துத் தெரிவு செய்யப்பட்டனர். போசகராகவும் ஆலோசகராகவும் கல்விமானும் உடையாருமாகிய திரு.க.நா.நடராசபிள்ளை அவர்கள் இருந்து செயற்பட்டார். தற்போது பாடசாலை அமைந்துள்ள காணிப்பகுதியில் உள்ள காட்டினை அழித்து சோளன்சேனை போட்டிருந்தார். கிராமசபைத் தலைவராக இருந்த திரு.ஆ.கணபதிப்பிள்ளை அவர்கள். கிராமத்தில் பாடசாலை அமைப்பதற்கான பொருத்தமான காணி கிடைக்காமையினால் தன் வசமிருந்த இரண்டு ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கி தன் வள்ளல் தன்மையை வெளிக்காட்டி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றுகொண்டார்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்களே, சோளன்சேனை சிரமதான முறையில் காணி துப்பரவு செய்யப்பட்டது. தேத்தா மரத்தடியிலிருந்து மேற்காக 60 x 15 அடி நீளத்தில் கம்பு தடிகள் வெட்டி வரப்பட்டு ஓலைக்கொட்டில் ஒன்று போடப்பட்டது தி/ சேனையூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 1957.02.11 இல் ஒரு சுப நேரத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் முதல் அதிபர் திரு.க.ஞானமுத்து முதல் மாணவன் திரு.க.நவரெத்தினசிங்கம். முதல் நாள் சேர்ந்த மாணவர்கள் அறுபத்து மூன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமும் தமிழர் அரசியலும்

முனைவர். ஆ.பு.மு.அஷ்ர.்.ப்,
முதுநிலை விரிவுரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

இலக்குகளை இயம்புவது இலக்கியம். ஒரு சமுதாயத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியற் கூறுகளை, அவற்றின் இயங்குநிலையை இலக்கியங்களே இயல்பாகப் பிரதிபலிக்கின்றன. இது தமிழ் இலக்கியத்திற்கும் பொருந்தும்.

இலக்கியத்தின் அடிப்படைகளை உணர்த்துவதில் தமிழ் இலக்கியங்கள் காலத்தாற் சிறந்து விளங்குகின்றன. பண்டைத்தமிழரின் வாழ்வும் வளமும் சங்கச் சான்றோரின் கைகளில் வண்ணம் பெற்றாற்போலவே, காலந்தோறும் தமிழர் பண்பாடும் கலைஞர் கைகளால் கலைநயம் பெற்றன.

அவ்வழி காலத்தால் அழியாத பல சிறப்புமிகு இலக்கியங்கள் தோற்றம்பெற்றன. அவற்றுள் அரசியல்சார் இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க பெருமையுடையன. புறநானூறு, திருக்குறள், கம்பராமாயணம் முதலானவை தமிழர் அரசியலையும் அரசியற் கூறுகளையும் சிறப்பாக எடுத்தியம்புவன. நூற்றாண்டுகளாய் பழந்தமிழர் வாழ்வோடு பிணைந்திருந்த அரசியற் பண்பாட்டையும் பண்பாட்டினவையும் குறித்துக்காட்டுவன. காவலர்களைப் பாவலர்களே நெறிப்படுத்திய திறத்தையும் வெளிக்காட்டுவன.

ஒட்டுமொத்தத்தில், அரசியலை வாழ்வியல் அடிப்படையாகவும் அவ்வாழ்வியலை இலக்கியமாகவும் கொண்டவர், பண்டைத்தமிழர். பின்னாட்களில், ஐரோப்பியர் வருகையோடு இக்கூறுகள் சிதைவடையத் தொடங்கின.

அந்நியர் வருகைக்கு முன், இந்தியத் துணைக்கண்டத்தில் பேரரசு, அரசு, சிற்றரசு, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி எனப் பெயர்பெற்று விளங்கிய தமிழர் அரசுகள் தம்மளவில் சுயாட்சியுடையனவாகச் சிறந்து விளங்கின. வரிவிதிப்பும் வளப்பகிர்வும் மக்கள்நலனை மனங்கொண்டனவாகவே விளங்கின. ஆட்சியருக்கும் சமூக நிறுவனங்களுக்குமிடையே மிகநெருங்கிய தொடர்புகளும் பேணுதலோடு விளங்கின. ஆகையினால், வளங்கள் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டன.

குளங்கள், வீதிகள் முதலானவை தேவைக்கேற்ப தரமுடையனவாக் கட்டப்பட்டன. ஆறுகள், நதிகள், மலைகள், வனங்கள், கடற்கரை முதலானவை பொருளீட்டல் நோக்கிலும் நிலைத்த விருத்தி நோக்கிலும் இயற்கையுடன் முரண்படா வகையில் சீராகப் பேணப்பட்டன. ஆகையினால் நாடு சிறந்து, மக்கள் மனமகிழ்ந்து குழாவினர். ஆனால், அந்நியர் வருகையோடு பின்னாட்களில் அவை நலிவடைந்து சிதைவடையத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர் வருகையுடன் உள்நாட்டவரிடம் தோன்றிய விடுதலை வேட்கையும் பிரித்தானியப் பேரரசின் வீழ்ச்சியோடு உலக அரங்கில் ஏற்பட்ட மாற்றமும் தமிழர் சுயாட்சியில் பெருஞ் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியிருந்தன. அத்தோடு சனநாயகம், நவீனத்துவம் முதலான சொல்லாடல்களும் முக்கியம்பெறத் தொடங்கின.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியரின் எழுச்சியினால் விளைந்த முதலாளித்துவச் சமூக அமைப்பின் தோற்றத்தோடுதான் நவீனத்துவம் தொடர்பான கருத்தியல்களும் முளைவிடத் தொடங்கின. இவை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் கீழைத்தேய நாடுகளைக் குறிப்பாக, இந்தியத் துணைக்கண்டத்தைப் பாதித்தன. இம் முதலாளித்துவச் சமூக அமைப்புத் தோன்றியபோது, பாரம்பரிய நிலப்பிரபுத்துவ நிறுவனங்களின் அமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்ட வகையில் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டம்சங்களில் நிகழ்ந்த மாற்றங்கள், அறிவியல் எழுச்சி, தனிமனித விடுதலை, சனநாயக அரசியல், மக்களிடையே சமத்துவம், யாவருக்கும் (குறிப்பாகப் பெண்களுக்குச்) சமவுரிமை முதலான நவீனத்துவம் சார்ந்த கூறுகளை உருவாக்கின.

இந்தியத் துணைக்கண்டத்தில், குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இயல்பாகவோ முழுமையாகவோ வளர்ச்சியடையாத முதலாளித்துவ சமூக அமைப்பு, ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் விளைவாகத் திணிக்கப்பட்டது. அதனால் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பின் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளும் பண்பாட்டம்சங்களும் நிலைபெற்றன. இதனால் நவீனத்துவம் சார்ந்த பல பிரச்சினைகளும் எஞ்சியிருந்தன. இவற்றால் விளைந்த சமநிலையற்ற தன்மையையும் முரண்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டே பின்னாட்களில் தமிழரின் நவீன அரசியற் தோற்றம் நிகழ்கிறது. இவ்வடிப்படை முற்றுமுழுதாக பண்டைத்தமிழரின் அரசியலினின்றும் வேறுபட்டவொன்றாகக் காணப்பட்டது.

நவீன சனநாயக அரசியல் முறைமை, பூகோளமயத்தின் செல்வாக்கிற்குட்பட்டவொன்றானது. ஆகையினால், குறிப்பிட்ட இன, மத, மொழிக் குழுமங்களுக்கப்பால் நிலங்களை மையப்படுத்திய அரசியல் நீரோட்டம் முனைப்புப் பெறுகிறது. இந்நீரோட்டம் பல்லின, பன்மொழி, பல்பண்பாட்டுச் சூழலில் தங்கியிருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஆகையினால், வரிவிதிப்பும் வளவிருத்தியும் பங்கீடும் ஒரு முரணிலைக் கண்ணோட்டத்தைக் கருத்திற்கொண்டதாகவும் பல்வேறு தரப்பினரதும் மனநிறைவை வேண்டிநிற்பதாகவும் அமைந்துள்ளது. இப்பகைப்புலத்தில் நின்றுகொண்டுதான் சமகாலத் தமிழரின் அரசியல் நீரோட்டத்தையும் அபிவிருத்தியையும் அதற்கான தடைகளையும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் பொருளாதாரத்தின் இளமைக் காலம் –அ.அனிக்கின்

**(நன்றி: வினவு)**

## பொருளாதாரம் கற்போம்

**பகுதி – 01**

பொருளாதார அறிவியலின் தொடக்க நிலையில், மனிதகுலத்தின் பண்பாட்டின் மீது அழியாத முத்திரையைப் பதித்துச் சென்ற தனிச்சிறப்புடைய சிந்தனையாளர்களை, விரிந்த பரப்பும் தற்சிந்தனையும் கொண்ட அறிவியல், இலக்கியத் திறமைமிக்க மாபெரும் அறிவாளிகளை நாம் காண்பது தற்செயலானதல்ல.

**சென்ற காலப் பொருளியலாளர்களும் இன்றைய காலமும்**

மனிதர்களின் வாழ்க்கையில் பொருளாதாரம் எப்பொழுதுமே மிக முக்கியமான பங்கு வகித்து வந்திருக்கிறது. இன்று இது குறிப்பிடத்தக்க அளவுக்கு உண்மையாகும்.

பண்டைக்கால மக்கள் அரசியலையும் மத்தியகால மக்கள் கத்தோலிக்க சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தார்கள் என்று கூறுவது எவ்வளவு பொருளற்றது என்று மார்க்ஸ் சொல்லியிருக்கிறார். மனிதகுலம் எப்பொழுதுமே "பொருளாதாரத்தில் வாழ்ந்திருக்கிறது" அரசியல், மதம், அறிவியல் மற்றும் கலை ஆகியவை பொருளாதாரத்தை ஆதாரமாகக் கொள்வதன் மூலமாக மட்டுமே வாழ முடிந்திருக்கிறது. கடந்த காலத்தில் பொருளாதாரம் வளர்ச்சி இல்லாமலிருந்ததனால்தான் இந்தக் காலங்களைப் பற்றி இப்படிப்பட்ட கருத்துக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது. நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நவீன பொருளாதாரம் இன்றியமையாத பங்கு வகிக்கிறது.

இன்றைய உலகம் என்பது உண்மையில் இரண்டு வெவ்வேறான உலகங்களாகும். சமவுடமை, முதலாளித்துவ உலகங்களாகும். இவை ஒவ்வொன்றும் தனியான பொருளாதார அமைப்பையும் அரசியல் பொருளாதாரத்தையும் கொண்டிருக்கின்றன. காலனி ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டிருக்கும் வளர்முக நாடுகள் உலக அரங்கில் மென்மேலும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. எந்தவிதமான வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுவது என்று முடிவு செய்ய வேண்டிய அவசியம் இந்த நாடுகளுக்கு மென்மேலும் அவசரமானதாகி வருகிறது. அரசியல் பொருளாதார வரலாற்றைப் படிப்பது, நவீன உலகத்தின் சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்கும் அரசியல் பொருளாதாரம் ஒருவருடைய சொந்த உலகப் பார்வையின் இணைந்த பகுதி என்று புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் மூலச் சிறப்புடைய நூல்கள் - குறிப்பாக ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ எழுதிய நூல்கள்--பொருளாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது புறவய விதிகள் இயங்குகின்ற அமைப்பு என்ற கோட்பாட்டை முதலாவதாக உருவாக்கி வளர்த்தன. இந்த விதிகள் மனித எண்ணத்திலிருந்து சுதந்திரமானதாக, ஆனால் மனிதர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றன. அரசின் பொருளாதாரக் கொள்கை இந்த விதிகளுக்கு விரோதமாக இல்லாமல் இவற்றைச் சார்ந்திருக்க வேண்டும் என்று இவர்கள் நம்பினார்கள்.



பிரான்சுவா கெனே

வில்லியம் பெட்டி, பிரான்சுவா கெனே, இன்னும் மற்ற அறிஞர்கள் பொருளாதார நிகழ்வுப் போக்குகளைப் பற்றி அளவுரீதியாக ஆராய்வதற்குரிய அடிப்படையை அமைத்தார்கள். அவர்கள் இந்த நிகழ்வுப் போக்குகளை ஒருவகையான வளர்சிதைவு மாற்றம் என்ற ரீதியில் ஆராய்ந்து அவற்றின் திசையையும் செயல் எல்லையையும் சுட்டிக்கூற முயன்றார்கள்.



வில்லியம் பெட்டி

மார்க்ஸ் சமூக உற்பத்திப் பொருளின் புனருற்பத்தி என்ற தனது கோட்பாட்டில் அவர்களுடைய அறிவியல் சாதனைகளைப் பயன்படுத்தினார். நுகர்வுப் பண்டங்களுக்கும் உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையே உள்ள சமநிலை, குவித்தல் மற்றும் நுகர்வுக்கிடையே உள்ள அளவு வீதங்கள், வெவ்வேறு பிரிவுகளுக்கிடையே உள்ள உறவுகள் நவீன பொருளாதாரத்திலும் பொருளாதார ஆராய்ச்சிகளிலும் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன.

இவர்கள் பொருளாதார அறிவியலின் முன்னோடிகள். இவர்கள் எழுதிய நூல்கள், நவீன பொருளாதாரப் புள்ளியியலைத் தோற்றுவித்தன. அதன் முக்கியத்துவத்தைப் பற்றி எவ்வளவு சொன்னபோதிலும் அது மிகையானதல்ல.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பாதியில் பொருளாதார ஆராய்ச்சி கணிதவியல் முறைகளை உபயோகிக்க முயற்சி செய்தது. இந்த முறைகள் இல்லையென்றால் இன்று பொருளாதார அறிவியலின் பல பிரிவுகளின் வளர்ச்சியை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. பிரெஞ்சுப் பொருளாதார நிபுணரான அன்டுவான் குர்னோ இந்தத் துறையின் முன்னோடிகளில் ஒருவர். முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் மூலவேர்களும் குட்டிமுதலாளித்துவ மற்றும் கற்பனாவாத பொதுவுடைமையைப் பேசியவர்களும் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உள்ள முரண்பாடுகள் பலவற்றை ஆராய்ந்தார்கள். முதலாளித்துவ சமூகத்துக்குப் பெருந்தீங்கு விளைவிக்கின்ற பொருளாதார நெருக்கடிகளின் காரணங்களைப் புரிந்து கொள்வதற்கு முதன்முதலாக முயற்சி செய்தவர்களில் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணரான ஸிஸ்மாண்டியும் ஒருவர். மாபெரும் கற்பனாவாத பொதுவுடைமையாளர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்-சிமோன், ஃபூரியே, ஓவன் மற்றும் அவர்களைப் பின்பற்றியவர்கள் முதலாளித்துவத்தை மிக ஆழமான விமர்சனத்திற்கு உட்படுத்தினார்கள்.

சமூகத்தை பொதுவுடமை ரீதியில் புனரமைப்புதற்குரிய திட்டங்களைத் தயாரித்தார்கள். வி.இ.லெனின் எழுதியது போல, "மனித குலத்தின் மிகச்சிறந்த அறிஞர்கள் முன்னர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில்களைக் கொடுத்ததில்தான் மார்க்சின் மேதாவிலாசம் அடங்கியிருக்கிறது. தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், பொதுவுடமை ஆகியவற்றின் மாபெரும் பிரதிநிதிகளின் போதனைகளின் நேரடியான, உடனடியான தொடர்ச்சியாகவே அவருடைய தத்துவம் தோன்றியது." மூலச் சிறப்புடைய முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம், மார்க்சியத்தின் தோற்றுவாய்களில் ஒன்றாக இருந்தது. எனினும் மார்க்சின் போதனை அரசியல் பொருளாதாரத்தில் புரட்சிகரமான திருப்புமுனையாக இருந்தது.


வி.இ.லெனின்

மூலதனம் என்பது ஒரு சமூக உறவு. விலைக்குப் பெறப்பட்ட பாட்டாளி வர்க்கத்தினரின் உழைப்பைச் சுரண்டுவதே அதன் சாராம்சம் என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். அவர் உபரிமதிப்பு பற்றிய தன்னுடைய கோட்பாட்டில் இந்தச் சுரண்டலின் தன்மையை விளக்கிக் கூறி முதலாளித்துவத்தின் வரலாற்று ரீதியான போக்கை — அதன் பகைமையான வர்க்க முரண்பாடுகள் தீவிரமடைந்து இறுதியில் மூலதனத்தின் மீது உழைப்பு வெற்றியடைவதை எடுத்துக்காட்டினார்.

எனவே மார்க்சின் பொருளாதாரத் தத்துவம் இயக்கவியல் ரீதியான ஒருமையைக் கொண்டிருக்கிறது. அது அவருக்கு முன்பிருந்தவர்களின் முதலாளித்துவக் கருதுகோள்களை நிராகரிக்கிறது.

அவர்கள் உருவாக்கியவற்றில் சரியானவையாக இருக்கும் ஒவ்வொன்றையும் படைப்பாற்றலோடு வளர்த்துச் சென்றது. இந்த ஒருமையை எடுத்துக்காட்டுவதும் விளக்குவதுமே இந்த தொடரின் முக்கியமான நோக்கம்.

அறிவியல், பொதுவுடமை மார்க்சிய-லெனினியத்தின் பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்தக் கொள்கைகளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கும் படைப்பாற்றலோடு வளர்த்துச் செல்வதற்கும் அவற்றின் தோற்றுவாய்களையும் மூலவேர்களையும் விளக்குவது மிகுந்த முக்கியத்துவமுடையதாகும்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிராதோ உறவுகள்

பர்ஹான் முஸ்தபா, நடுத்தீவு, மூதூர்.

மூதூரில் இருந்து கிழக்காக அமைந்த இடம்தான் கட்டைப்பறிச்சான் ஊர். மூதூருக்கும் கட்டைபறிச்சானுக்கும் இடையே ஓர் ஆறு குறுக்கறுக்கிறது, இந்த ஆற்றை தாண்டிச் செல்ல ஆங்கிலேயன் காலத்தில் உருவாக்கப்பட்டதைப் போன்று ஒரு பழைய பாலம். இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த உரிமைப் போராட்ட சண்டையில் இந்தப் பாலம் இனங்களுக்கிடையிலான ஒரு பிரிவு எல்லையாக இருந்தது. அருமைத்துரை ஐயாவும், அப்துல் ரசாக்கும் பால்ய கால நண்பர்கள்.

இளமை காலத்தில் ஒன்றாக படித்தது முதல் வயல் வெளிகளில் கொக்குக் கண்ணி வைத்து பிடிப்பது, வாய்க்காலில் மீன் பிடிப்பது என மகிழ்ச்சியாக வாழ்ந்தவர்கள். இருவருக்கும் இப்போது எழுபது வயதை தாண்டி விட்டது. இவர்கள் இருவரும் சந்தித்தாலே ஐயத்தில் கைது செய்யப்படுவார்கள் என்ற காலம் வந்து விட்டது. பாலத்திற்கு அப்பால் போராட்ட குழுவும், இப்பால் அரசபடையும் தங்களின் எல்லை என ஒரு படத்தை வரைந்து இடங்களை அவரவர் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

ஐயாவின் குடிசையில்....
ஐயா, தன் வாழ்நாளின் கடைசி நிமிடத்தின் மூச்சுக்காற்றை தக்க வைக்க இயற்கையோடு போராடிக் கொண்டிருந்தார். தன் நண்பன் இறுதி தறுவாயிலாவது பக்கத்தில் இல்லையே என்ற கவலை வேறு. தன் மகனை கை சாடையால் அழைத்து, "நான் செத்தா என் உடலுக்கு அப்துல் ரசாகிடம் உடுப்பு வாங்கி போட்டுத்தான் அடக்கம் செய்யனும்" என்று தன் கடைசி ஆசையை சொன்னார்.

இதற்கிடையில் மூதூருக்குள் போக முடியாது. இரு மதங்களுக்கும் இடையில் கலவரம் நடந்து கொண்டிருந்தது. போராட்டக்காரர்கள் அரசாங்கத்தோடு போராடும் போது எதேச்சையாக ஒரு இஸ்லாமியர் சாவடைந்திருந்தார். இதுவே இனக்கலவரமாகி இருந்தது.

அன்றைய காலகட்டத்தில் சில மதசார்பான அரசியல் கட்சிகளும், போராட்டக்காரர்களும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வந்தார்கள். இவர்களின் வளர்ச்சிக்கு இந்த மதக்கலவரம் பாரிய பங்களிப்பினைச் செய்தது.
ஒரே மொழி பேசும் மூன்று மதத்தவர்கள் இனக்கலவரம் என்ற பெயரில் இரண்டு குழுக்களாக பிரிந்திருந்தனர். ஒரு தரப்பில் இந்துக்களும் கிறித்துவர்களும், மறு தரப்பில் இஸ்லாமியர்கள். முதல் தரப்பு தங்களை தமிழர்கள் என அடையாளப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு தரப்பு தன்னை முஸ்லிம்கள் என அடையாளப்படுத்தியது. இரு தரப்பின் தாய் மொழி தமிழாக இருந்தது. அரசியல் கட்சிகளும் இப் பெயரை தங்கள் கட்சியின் பெயரோடு இணைத்து கடைசிவரை இரு சமூகத்தையும் இணைய விடாமல் பார்த்துக் கொண்டது.

குடிசையில்..... ஐயாவின் உயிர் பிரிந்தது.
ஐயாவின் கடைசி ஆசையை நிறைவேற்ற யார் மூதூருக்கு போவது என திண்டாடினர். கடைசியில் வயோதிபத்தை காட்டி தான் போவதாக ஐயாவின் மனைவி முன் வந்தார்.

தமிழரும் ஒரு இஸ்லாமியரும் சந்தித்தால் அரச தரப்பில் இஸ்லாமியனை போராட்டக் குழுவின் ஆதரவாளனாகவும், தமிழரை அரச தரப்பின் ஆதரவாளனாக போராட்டக் குழுவும் ஐயக் கண் கொண்டு பார்த்த நேரம் அது. அம்மா, மூதூர் வந்து அப்துல் ரசாக்கை சந்தித்து சாவுச் செய்தியையும் ஐயாவின் கடைசி ஆசையையும் சொன்னார். தன் நண்பனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியாததை இட்டு அப்துல் ரசாக் தேமித் தேமி அழுதார்.

அது இஸ்லாமியர்களின் தியாகத் திருநாள் மாதம். மூன்று நாட்களின் பின்னர் தியாகத் திருநாளின் பெருநாள் பண்டிகையான "ஹஜ்ஜுப் பெருநாள். தனக்காக எடுத்திருந்த புத்தாடையை தன் நண்பனின் கடைசி ஆசைக்காக தியாகம் செய்தார் அவர்.

இவ்வாறு நட்புகள் மட்டுமல்ல உறவுகளும் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாதவாறு ஒரு கொடூரமான காலம்தான் அது. இன்று எல்லாம் மாறிவிட்டது என்று எண்ணும் போதே என்றோ ஒரு சிலர் விதைத்த விதைகள் ஆங்காங்கே முளைக்கத்தான் முயற்சிக்கிறது.

மதங்களால் நாம் மாறுபடலாம், நாம் இறைவனை நேசிக்க முன் பிற மனிதனை நேசிக்க வேண்டும்.

மதம் என்பது நம் அறிவுக்கு எட்டிய எல்லை, இனம் என்பது நம்மால் மாற்ற முடியாத ஒன்று. மதம் மாறலாம் ஆனால் இனம் மாறாது. மொழியால் நாம் தமிழர்கள். இரு கை தட்டினால்தான் ஓசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கைநாகனின் கழுகுப் பார்வை

## கருத்தியல் கிளர்ச்சி – தேவையும் நடையும்.

தோழர்.இராசநாயகம் - இலண்டன்

தேவையென்பது காலத்தின் கட்டளை. நடைநோக்கத்தையும் இதை அடையும் வித்தையையும் அதன் வீச்சையும் குறிக்கும்.

மாற்றம் ஒன்றைத் தவிர மாறாநிலை என்றில்லை. இது இயங்கியல் நியதி. இயங்கியல் என்றால் இயற்கையின் சுழற்சியையும் ஓட்டத்தையும் விளக்கும் விதி. இது ஓர் அறிவியற் களஞ்சியம்.

பொருளும் நயமும் இசைந்து இணைவது போலத்தான் மெய்மையும் கருத்துக்களும். ஐம்புலன்களினூடாக மெய்மையை உணர்வதும், இவ்வுணர்வைத் தர்க்கித்து பகிர்த்தாய்ந்து அடைவது தான் அறிவு (thesis, antithesis, synthesis). இது ஓர் ஊழிக்கூத்து (cyclic change). மெய்மையை முழுமையகப் புரியமுடியாது. அறியாமைதான் அறிவு என்பது மூத்தோர் கூற்று. இருந்தாலும், நமது புரிதலை நடைமுறைப் பயிற்சியால் மேம்படுத்தலாம். நடைமுறைக்கும் கோட்பாட்டிற்கும் இடையிலான முரண்பாடுகளினாலும் இசைவினாலும் தான் புரிதல் மீண்டும் மீண்டும் மேம்படுகின்றது. இதைத் தான் சீனத்தத்துவதில் 'யின்- யாங்' (Yin-Yang) என்று கூறுவர். இதைத் தமிழில் லிங்கம் அல்லது சிவ-சக்தி அல்லது கடவுள் என்கிறோம். இத்தத்துவத்தின் விளக்குதல்கள் மதம் சார்ந்தவையல்ல, மொழி சார்ந்தவை.

இந்த இலங்கியல் பொருள்முதல்வாதத் தத்துவம் மேற்கத்தய நாடுகளில் இருந்து தொடங்கியதாகவும், இதற்கு புளூாட்டோ, கேகல், ஏங்கல்ஸ், மார்க்ஸ் போன்ற தத்துவஞானிகள்தான் மூலகர்கள் என்றும் சொல்வார்கள். ஆனால், மனசு ஒரு பொருள் என்று வேதங்கள் கூறுகின்றன. அதே போல இயங்கியல் பொருள் முதல்வாதம் பற்றிய பல விவாதங்கள் சங்ககால வரலாற்றுப் பதிவுகளில் உள்ளது. செங்கைநாகன் என்ற ஈழத்து அறிஞன் இந்த விவாதங்களில் முதன்மையானவர் என்றும் கூறப்படுகிறது. இவர் பற்றிய தொடராய்வு அவசியம். நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டியது இதுதான் - சமுதாயமும் இவ்விதிகளுக்கு விலக்கானதல்ல. இயற்கையோடு இணைந்ததுதான் சமுதாயம்.

சமுதாயத்தை இரண்டு அங்கங்களாகப் பார்க்கலாம் என்று மார்க்ஸ் என்ற அறிஞர் கூறுகிறார். ஒன்று அடித்தளம் (Base) அடுத்தது மேல்கட்டுமானம் (Super structure). ஒரு வீடு கட்டுவது போலத்தான். அடித்தளம் என்பது நிலம், கருவிகள், தொழிற்சாலைகள், மூலப் பொருட்கள் போன்ற உற்பத்திச் சாதனங்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள், விவசாயிகள், கூலியாட்கள், குத்தகைகாரர், சாதி போன்ற உற்பத்தி உறவுகளையும் உள்ளடக்கும். இதைத்தான் உற்பத்தி வழிமுறைகள் (means of production) என்று அழைக்கப்படுகின்றது. மேல்கட்டுமானம் என்பது உற்பத்திக்கு அப்பாற்பட்ட கலை, கலாசாரம், சட்டம், காவல்துறை, அறிவியல், சமயம், தத்துவம் போன்றவை அடங்கும். இந்த இரண்டு மாடிகளும் தனித்தியங்குவனவல்ல, இணைந்தவை.

அந்தோனியோ கிறாம்ஸ்கி என்கின்ற இத்தாலிய தத்துவ வித்தகன் மார்க்ஸின் மேல்கட்டுமானத்தை இரண்டாக வகுக்கின்றார். ஒன்று, காவல்துறை இராணுவம் போன்ற அரசியல் சமூகம், மற்றது கருத்துக்களைக் காவும் ஊடகங்களான ஜன (சிவில்) சமூகம். இந்த இரண்டும், அதிகாரவர்க்கத்தின் ஆயுதங்களாக மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்துகின்றன. தங்களின் பிரச்சனைக்கான தீர்வுகளுக்கு எதிராக செயற்படுமளவிற்கான முழுவதும் மாயையை உருவாக்குவதில் விண்ணர்கள். இதை நாங்கள் உலகம் பூராகவும் பார்க்கலாம்.

கடந்த எழுபது ஆண்டுகளாக, இலங்கையில் தமிழ்மொழி பேசும் மக்களின் போராட்டம் உரிமைக்கான பயணிப்பு மட்டும் தானென படம் போட்டுக்காட்டப்பட்டுள்ளது. இந்த வட்டத்தைச் சுற்றிய கருத்தியல் மேல்கட்டுமானம் தான் இன்றும் சவாரி வருகின்றது. உண்மையில் மக்களின் இதய அழுகையென்ன? இவர்களின் ஆத்ம உந்தலை உரிமைக்கான போராட்டம் என்ற வட்டத்துக்குள் அடைக்கலாமா? உரிமை கிடைத்தபின் மக்களின் உடமைக்கான பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என்று ஓரங்கட்டுவது ஞாயமானதா? தமிழ் பேசும் மக்களிடையே மலர்ந்து வரும் நவசெல்வந்தர்களின் உரிமைகள் எங்கே? அல்லது, அரசியல் செல்வாக்குடைய புதிய செல்வம் கொளிப்பவர்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றதா?

தமிழ் மொழி பேசும் மக்களின் போராட்டம் உடமைக்கான போராட்டம். உரிமையும் உடமையும் ஒன்றோடொன்று கலந்தவை. இதைத்தான் மார்க்ஸின் 'அடித்தளம் -மேல்கட்டுமானம்' தத்துவம் இடித்துப் புகட்டுகின்றது. 'மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்துள் மறைந்தது மாமத யானை' போன்று தான் உடமையும் உரிமையும். உடமைக்கான போராட்டம் என்று படம் போட்டால், எங்கள் நோக்குத் திரும்பும், சரிநிலை தேடும்.

இதற்கு கருத்தியல் கிளர்ச்சி வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கியங்களும் மனித வாழ்வும் ஓர் அறிமுகம்

திரு. இரா.இரத்தினசிங்கம், ஓய்வுநிலை அதிபர், சேனையூர்

அரிது அரிது மானிடராதல் அரிது, மானிடராகினும் கூன்,குருடு,செவிடு,பேடு நீங்கிப் பிறத்தல் அரிது, பிறந்த காலையில் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது என ஔவையார் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

இங்கு ஞானம், கல்வி என்பன மனிதவாழ்வின் மிக முக்கியமானவையென்பது உணர்த்தப்பட்டுள்ளது. இந்த வகையில் நாம் நோக்கும் போது மனிதன் வாழ்வதற்கு அடிப்படை வசதிகளாக நாம் கூறும் உணவு, உடை, உறையுள் என்பன மட்டும் போதுமானதென எண்ண முடியாது. இவை உடல் வாழ்வதற்கும் உயிர் நிலைத்திருப்பதற்குமான ஆதாரங்கள் எனலாம்

மானிடத்தின் உளப்பசியெனவும் அதன் தேவைகள் உண்டு எனவும் உளவியலாளர்களும் சமூக அறிஞர்களும் எடுத்துக் கூறியுள்ளனர். ஒரு வகையில் அதுவும் ஒரு பசிதான் என உணரமுடியும். மனிதன் இயற்கையின் வயப்பட்டு வாழும் ஒரு பிராணி. இதைத்தான் ரூசோ எனும் சமூகவியலாளர் மனிதன் ஒரு சமூகப்பிராணி எனக் குறிப்பிடடுள்ளார். இந்த வகையில் நோக்கும்போது மனிதன் தோன்றிய காலம் முதல் அவன் உளத் தேவைகள் அதன் மூலமாக திருப்திகள் என்பனவற்றினால் அவனது எதிர்பார்ப்புக்களும் தேவைகளும் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் தேவையெனலாம்.

மானிடத்தின், ஆத்மீகத்தின் தேவைகள், திருப்திகள் ஒரு வகையில் இனம் புரியாதவிடத்தும் உள்ளுணர்வுகள் வயப்பட்டவைகளாக வாழ்ந்து வருபவைகளேயாகும். இவையே பிற்காலத்தில் பண்பாடு கலை, இலக்கியமாக பரிணமிக்கத் தொடங்கியிருக்கலாம். இவற்றிக்கான வரையறையென்பதை உறுதியிட்டு கூறமுடியாத விடத்தும் அவற்றின் வெளிப்பாடுகள் மானிடத்தின் வளர்ச்சிக்கும் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றன.

ஆன்மீகத்திற்கும் கலை இலக்கியங்கள் நிறைவாக உள்ளமையினால் இவற்றை இந்து மதம் தெய்வீக கலைகள் என முக்கியத்துவம் கொடுத்து வந்ததோடு அவை வளர்க்கப்படும் இடமாகவும் மாற்றம் பெற்றதை வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது இவற்றை தெரிந்து கொள்ள முடியும். எனவே தான் ஆயகலைகள் அறுபத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை என கலைக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள தொடர்பினை எடுத்துக் கூறியுள்ளனர்.

எனவே உடலுக்கு உயிர் போன்று உயிருக்கு கலையும் கலைக்கு கடவுளும் ஒன்றிணைக்கப் பட்டுள்ளது. வழிபாட்டின் தேவை மனிதனுக்கு எத்தகையதோ அதே போன்று கலைகளின் தேவையும் இலக்கியங்களின் தேவைகளும் முக்கிய இடத்தினை பெற்றிருக்கின்றதென்பதை அறிந்து கொள்ளலாம்.

உள்ளத்து உறைந்துள்ள இவைகள் பல்வேறு வழிகளாக வெளிப்படுத்தப்படுதலும் தெய்வீகத்தோடு ஒப்பிடக்கூடியதும் நிதர்சனமானதெனலாம். ஆதலால்தான் சமயத்துக்கும் கலைக்கும் பிரிக்கமுடியாத சம்பந்தமிருப்பதையும் இந்து மதம் கலைகளை கடவுள் தன்னையேற்றி பேணுவதையும் காண்கின்றோம். காலப் போக்கில் ஆலயங்களும் வழிபாட்டிடங்களும் புனிதமான இடங்களும் பயபக்தியோடு கடவுள் வழிபாட்டுக்கு கொடுத்த இடத்தினை கலைகளுக்கு கொடுத்து வருகின்றன.

அந்த வகையில் இக்கலைகளை "முருகியல் கலை" அல்லது "அழகியல் கலை" என்று பெயர்சூட்டுகின்றோம். அழகைத் தெய்வமாக எண்ணுவதால் முருகு-முருகன், அழகு-அழகன் என தெய்வங்களை நோக்குகின்றோம். அதற்காக கலைவாணி என அன்னை சரஸ்வதியை வழிபடுகின்றோம். இந்த வகையில் அறுபத்து நான்கு கலைகள் என எல்லைப்படுத்தினாலும் அதற்கும் மேலாக இன்று தோற்றம் பெற்றுள்ளமை வியப்பானதெனலாம். ஆதலால் எந்தவொரு காரியமும் கண்டுபிடிப்புக்களும் மாற்றங்களும் ஏதோவொரு கலையினூடான வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. ஆதலால் மனிதன் வாழும் வரை கலைகளும் மரணித்துவிடாது வாழ்ந்து கொண்டே இருக்கும்.

இத்தகைய கலைகளில் பிற்காலத்தில் ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம், கட்டிடம் விளையாட்டு ஆக்க இலக்கியங்கள் என இன்னோரன்ன பல்வேறு வடிவத்தில் கலைகளாக வெளிக் கொணரப்பட்டதோடு அவற்றில் வளர்ச்சியும் பேணுதலும் இரசித்தலும் அதற்கு மனித மனங்கள் லயித்தலும் இவ்வாறு மானிடத்தோடு பின்னிப்பிணைந்தவைகளாகவும் பேணப்படுவைகளாகவும் காணப்படுகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட ஊரக அமைப்புகள்

திரு.க. ஜீவருபன், பாரதிபுரம், மூதூர்.

நமது நாட்டின் ஊரக மட்டத்தில் செயற்படுவதற்கென பல அமைப்புகள் மத்திய மற்றும் மாகாண அரசுகளினால் உருவாக்கப்பட்டுள்ளன. அவை ஊரக மட்டத்தில் மக்களதும் அவர்கள் வாழும் பிரதேசங்களினதும் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன. சில அமைப்புகள் மத்திய அரசிலும் வேறு சில அமைப்புகள் மாகாண அரசிலும் பதிவுகளை மேற்கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், மரண ஆதார சங்கம், கோயில் சங்கம், சனசமூக நிலையம், விவசாயச் சம்மேளனம் அல்லது சங்கம், விளையாட்டுக் கழகம், இளைஞர் கழகம், கூட்டுறவுச் சங்கம், சிக்கனக் கூட்டுறவுச் சங்கம், கால்நடை வளர்ப்போர் சங்கம், மீனவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம், இசைக் கழகம், சிறுவர் பாதுகாப்புக் கழகம், முதியோர் சங்கம் ஆகிய அமைப்புகள் ஊரக மட்ட அமைப்புகளிலே முக்கியமானவையாக உள்ளன.

மத்திய அரசின் நிர்வாக அலகாகச் செயற்படுகின்ற பிரதேச செயலகங்களிலே சில அமைப்புகள் தங்கள் பதிவுகளை மேற்கொள்கின்றன. அவையாவன,

1. கிராம அபிவிருத்திச் சங்கம்
2. மரண ஆதார சங்கம்
3. கோயில் சங்கம்
4. விளையாட்டுக் கழகம்
5. இளைஞர் கழகம்
6. இசைக் கழகம்
7. முதியோர் சங்கம்
8. மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்

மாகாண அரசின் நிர்வாக அலகாகச் செயற்படுகின்ற பிரதேச சபைகளிலே பதியப்படுகின்ற அமைப்பு சன சமூக நிலையம்.

கமநல கேந்திர நிலையம் அல்லது மகாவலி அபிவிருத்தி சபைகளிலே பதியப்படும் அமைப்பு விவசாயச் சங்கம் அல்லது விவசாய சம்மேளனம்.

மீன்பிடித் திணைக்களத்தில் பதிவு செய்யப்படும் அமைப்பு மீனவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படும் அமைப்புகள்: கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பிற தேவைக்கேற்ற வகையில் உருவாக்கப்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள். எடுத்துக்காட்டாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போன்றன. சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்திலே பதியப்படும் அமைப்பு சிறுவர் பாதுகாப்புக் கழகம்.

இவ்வாறு பல்வேறு நிருவாக அலகுகளிலே தமது தேவைக்கேற்ற வகையில் பதிவுகளை மேற்கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. ஊரக அமைப்புகளிலே அனைத்து அமைப்புகளும் தமது துறைகளிலே முக்கியமானவை என்பதனை அவை உணர வேண்டும். தற்போதைய நாட்களிலே ஊரக மட்ட அமைப்புகள் பெரும்பாலும் செயற்றிறன் அற்றவையாக நோக்கப்படுகின்றது. இதற்கு முதன்மைக் காரணமாக இருப்பது ஓர் ஊரில் உள்ள பல அமைப்புகளில் குறிப்பிட்ட ஒரே நபர்கள் முக்கிய பொறுப்புகளில் இருப்பதாகும் என ஊரக அமைப்புகளின் நடவடிக்கைகள் தொடர்பான நோக்கர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஓவ்வொரு அமைப்பும் சரியான திட்டங்களை வகுத்து தமது பணிகளை திறம்பட ஆற்றினால் ஊர்கள் விரைவாக வளர்ச்சியடைவதோடு மக்களது வாழ்க்கை நிலையிலும் மேம்பாடு விரைவாக ஏற்படும் என்பதனை மறுப்பதற்கில்லை.

1. கிராம அபிவிருத்திச் சங்கம்

ஓர் ஊரின் மிக முக்கிய ஊரக மட்ட அமைப்பாக கிராம அபிவிருத்திச் சங்கம் காணப்படுகின்றது. இச்சங்கம் பற்றிய யாப்பு அல்லது துணை விதி, அதன் நடைமுறைகள் என்பன பற்றி விரிவாகப் பார்ப்போம்.

முதலிலே அவ்வமைப்பின் பெயரானது ஓர் ஊரின் பெயரினை தொடக்கமாக கொண்டு பெயரிடப்படுகின்றது. எடுத்துக்காட்டாக பெருவெளி என்ற ஊரிலே உள்ள சங்கமானது பெருவெளி கிராம அபிவிருத்திச் சங்கம் என பெயரிடப்படுகின்றது. வேறு வகையில் பெயரிட முடியாதென மாகாண அரசின் அறிவுறுத்தல் கூறுகின்றது. கிராம அபிவிருத்திச் சங்கம் என்பது முழுமையான தமிழ் சொற்றொடர் இல்லை என்பதனை நோக்க வேண்டும். "ஊரக மேம்பாட்டுச் சங்கம்" அல்லது "ஊரக மேம்பாட்டு அமைப்பு" என பெயரிடப்படுதலே பொருத்தமாக இருக்கும்.

இதனை மாகாண அரசுகள் தமது கவனத்தில் எடுத்தல் வேண்டும். தமிழ் ஆர்வலர்களும் இவ்விடயத்தில் தமது அக்கறையினை வெளிப்படுத்த வேண்டும்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தை சுர்ஜித்தின் நினைவாக எழுதப்பட்ட கவிதை.

## மீளும் மீட்பனுயிர்...

கவிஞர். தில்லைநாதன்பவித்ரன்

படுக்கை விரிப்புக்களின்
அலங்கோலத்தில்
வாழ்வின் அசிங்கங்கள்
தொங்கிக் கொண்டிருந்தபடி
விடிந்திருக்கிறது
இந்தக்காலை

முன் எப்போதும் இல்லாமல்
ஒரு மழைப்பொழுதின் தேநீர்
கசத்துப்போக
கைபடாமல் கிடக்கிறது
தேநீர் குவளைகள்

மரணத்தின் வாசனை
காற்றோடு கலந்து வந்து
மழையென பொழிந்து வழிகிறது

ஓ

தேர்ந்த கவிஞனால் கூட
இந்த மழையை
இரசிக்கவோ எழுதவோ
முடியாமல் போகும்

சபிக்கப்பட்ட இந்த உலகத்தின்
மீட்பன் ஒருவன்
ஜீவசமாதி அடைய

இனி வந்து
எங்கும் பரவி அழிக்கும்
பரலோக நெருப்பை
எந்த கவிஞனாலும்
இரசிக்க முடியும்

மீட்பர்களை கொன்றே
பழக்கப்பட்ட உலக
ஒழுங்கில் ஒரு
கவிஞனால்
வேறென்ன முடியும்

ஆனால் ஒன்று
வல்லரசுகளின்
எக்களிப்பை அடக்க
காலந்தோறும்
மீட்பர்கள்
மீள்வார்கள்

ஆழ்துளையுள் போன
மீட்பனின் உயிரை
தேடுங்கள்
ஒரு வேளை அது
ஆர்ஜென்டீனாவிலோ
வால்கா நதி ஓரமோ
வல்வெட்டித்துறையிலோ
பிறக்கக்கூடும்

அல்லது போனால்
பெத்தலகேம் மாட்டுத்தொழுவத்தில்
ஆக்ராவின் மதுராவில்
மீண்டும் உயிர்க்கக்கூடும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரும் அரசியலும்

பேராசிரியர்.பாலசுகுமார்,
மேனாள் முதன்மையர், கலை கலாசாரப்புலம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

அரசியல் என்பது இன்றைய தமிழ் சூழலில் ஓய்வுபெற்ற கல்வியாளர்களின் கடைச்சரக்காய் மாறிவிட்டதோ என்ற பெருத்த கேள்வியை முன்னிலைப் படுத்தி நிற்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சோக்கிரட்டிஸ் எனும் அரசியல் மேதை இளைஞர்களை அரசியலுக்கு அழைத்து நின்றான். அவன் அழைப்பு இன்னமும் ஈழத்து தமிழ் அரசியல் களத்தில் தேங்கிக் கிடக்கிறது.

எழுபதுகளில் இளைஞர்கள் தமிழ் அரசியல் முகத்தை மாற்றத் தொடங்கினர். அது பன்மைத்துவ நோக்குடன் பயணித்தது. மக்கள் பெரு நம்பிக்கை கொண்டனர். அபரிமிதமான ஆதரவு இளைஞர்களிடம் ஆர்வம் மிக்க அரசியல் வேட்கையை உருவாக்கியது. ஈழப் புரட்சி அமைப்பு அறிவார்ந்த அரசியலை உருவாக்க முனைந்தது. மக்கள் அரசியல் மயப்படுத்தபட வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டது. அரசியல் வகுப்புகள் மூலம் தோழர்கள் அறிவூட்டப்பட்டனர். வளமான ஓர் அரசியல் எதிர்காலத்துக்கான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இளைஞர்கள் ஊரக ரீதியாக ஒன்றிணைய வேண்டும். வாசிப்பு பழக்கமுள்ள ஓர் அறிவார்ந்த இளம் சமூகமாய் மாறவேண்டும். உலக அரசியல் ஆசிய, தென்னாசிய அரசியலின் தனித்துவங்களை விளங்கிக் கொண்டு வேலைத் திட்டங்களை உருவாக்கி அதன் வழி பயணித்து தனித்துவமான அரசியல் நோக்கோடு ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு புதிய நோக்கு லட்சியம் என அவர்களாகவே கூடித் தீர்மானகரமான முடிவுகளோடு மக்கள் செயற்பாட்டுக் களங்களை உருவாக்க வேண்டும்.

அந்த செயல்பாட்டு களங்கள் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். அரசியல் என்பது வெறும் அடிப்படை தேவைகள் சார்ந்தது மட்டுமல்ல, என்பதை இளைஞர்கள் உணர்த்தி நிற்க வேண்டும்.

நாடாளுமன்ற பதவி என்பது ஆலயங்களுக்கு ஒலிபெருக்கி வாங்கி கொடுப்பதும், விளையாட்டுக் கழகங்களுக்கு பந்து மட்டை அன்பளிப்பு செய்தலும், பாடசாலைகளுக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் வாங்கிக் கொடுப்பதோடு மட்டும் முடிந்து விடுவதல்ல. அது உரிமை சார்ந்தது என்பதை விளக்கி மக்களை அரசியல் சித்தாந்த தளத்தில் வழி நடத்த வேண்டும்.

இளையோர் அரசியலுக்கு வருவது என்பது அன்று பெய்த மழைக்கு முளைக்கும் காளான் போல் அல்லாமல் அடிக்கட்டுமானம் மிக்க அரசியல் அறிவு சார்ந்து சிந்திப்போராய் உருவாக வேண்டும். மூடத் தனங்களில் இருந்து விடுபட்டு முற்போக்கு கருத்துக்களுடனான ஓர் அரசியல் நகர்வின் வழி செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவாகும் எண்ணப் புத்தாக்கம்

இஹ்சான் ஜே.எம்.ஐ.மொஹமட், மூதூர்.

புத்தாக்க சிந்தனை நுகர்ச்சியை அண்மைகால புதிய தலைமுறை தங்களின் சூழலியல் வட்டாரத்தில் ஆதரித்த வண்ணமே முன்னோக்கி நகர்கின்றார்கள். இந்த நுகர்ச்சி சமூக பண்பாட்டியல் மற்றும் நாகரிக நுகர்சியாக அல்லாமல் சிந்தனா ரீதியான எழுச்சியாக உணரப்படும் போதுதான் அதன் உண்மையான அடைவுமட்டத்தை பொது அவையில் எம்மால் அனுபவிக்க முடியும்.

தளம்பல் நிலை புத்தாக்க சிந்தனையினால் சமூகத்தில் பாரியளவிலான அதிர்வலைவுகளை உண்டாக்கிவிட முடியாது. குறிப்பாக இளைஞர் யுவதிகளின் தொலைநோக்குப் பார்வையும் தான் வாழ்கின்ற சூழல் கட்டமைப்பில் நிலைத்தன்மையை உத்தரவாதம் செய்யும் வகையிலான முன்னெடுப்புகளே இந்த புத்தாக்க சிந்தனைக்கு வலுவூட்டமுடியும். இந்த பின்னணியின் அடிப்படையில் நாம் வாழ்கின்ற கட்டமைப்பில் இடைத்தொடர்புப் பின்னல் எமது சிந்தனை விரிவாக்கத்தில் மிக அதிகமான பங்கை உள்ளீர்த்து விடுகின்றது.

அந்தவகையில் நாம் முன்மொழியும் எண்ணக்கரு எமது சமூகத்தில் பிரயோகம் செய்யும் சாத்தியக்கூறுகள் மற்றும் சந்தரப்பங்கள் இழிவாக காணப்பட்ட போதும் அதற்கான முயற்சிகளையும் முனைப்புகளையும் எம்மால் மேற்கொள்ளப்பட்டதா என்பதுவே எமக்கான கேள்விக்கணை என்பதை நாம் ஏந்திக்கொள்ளவேண்டும். மாறாக எதிர்மறை வாதம், விமர்சனம் மற்றும் மறுப்புகள் மீதான எதிர்த்தாக்குதலை முன்னிலைப்படுத்தி எமது எண்ணக்கருவை எமக்குள்ளே புதைத்துவிடுவது என்பது ஒரு சிந்தனைவாதியின் அழகல்ல...

சூழல் மாற்றங்கள் சடுதியாக இடம்பெறும் ஒரு விடயதானமன்று. மாறாக தொடர்ச்சியாக நிகழ்த்தப்படும் அதிர்வுகள் மற்றும் மோதல்கள் காரணமாக உண்டாகும் மொத்த அகப்புற வெளிப்பாடுகளாகும். இதனை எவ்வாறு அந்த சமூகம் ஏற்றுக்கொள்கின்றது என்பதைப்பொறுத்தே அந்த சமூகத்தின் மறுமலர்ச்சி தொடக்கம் பெறுகின்றது.

எமது இளையோர்களின் புத்தாக்க சிந்தனை விருத்தியையும் வெளிப்பாடுகளையும் இன்றுள்ள மூத்த தலைமுறையின் அதிகார வர்க்கத்தினர் ஆதரிப்பதனூடாகவும் அங்கீகாரம் அளிப்பதனூடகவுமே அதன் சமூக அடைவை கிரகித்துக்கொள்ள முடியும் என்பதோடு அதற்கான வளங்களையும், வழி வகைகளையும் இன்றுள்ள தலைமுறைகள் உணர்ந்து செயலாற்றுவதில் உண்மையான மாற்றத்தையும் காணமுடியும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதியின் விளிம்பில்

கவிச்சுடர் - சிவரமணி,
திருக்கோணமலை.

மலரை அவன் சிறுபிராயம் முதல் பார்க்கிறான். ஆனால் பேசா மடந்தையாகவே இருந்துவிட்டான். அவளும் மனதை திறக்காது வீட்டார் சொற்படி மணம்முடித்து மூன்று மாதத்தில் யாவும் முடிந்து கைம்பெண் ஆனாள்.

இதனை கேள்விப்பட்ட தனா உடைந்தே போனான். அவள் எங்கிருந்தாலும் நல்லா வாழவேண்டும் என இருந்தேன். ஏதோ நினைவில் மாலை தொடுத்தவன்.

பூசாரியார் குரல் கேட்டு என்ன தனா ஆழ்ந்த யோசனை. சொன்னாலும் கேட்க மாட்டாய் அடம் பிடித்து செய்வாய். பெரிய வைத்தியன் இங்க தொண்டன்.

ஏம்மா மலர்
சொல்லுங்க ஐயா.
இங்க தனா தனிய மாலை கட்ட நேரம் போகுது பூசை நேரம் நெருங்குகிறது. நீயும் கொஞ்சம் எடுத்து கொடுத்து உதவினால் சீக்கிரம் முடிந்திடும்.

ம் சரி ஐயா
அவன் அமர்ந்திருந்த மடப்பள்ளி திண்ணையில் தானும் அமர்ந்து தோழியையும் அமரச்சொன்னாள்.
தனாவே பேச்சை ஆரம்பித்தான்.

இப்ப என்ன செய்றிங்க
வீட்ல சும்மா தான்.
ஏன் ஏன் நீங்க படிச்சனிங்க ..ஒரு வேலைக்கு போகலாமே..
போகலாம் ஆனால் விருப்பமில்லை.

அப்படியில்லை தனாசேர் இவளுக்கு கூச்சம். தன்னை மற்றவர்கள் இழிவாக சகுனத்தடையாக பார்ப்பதாக
என்ன இது எந்தக்காலத்தில இருக்கீங்க..
நானும் அன்று செல்லாக்காசு இன்று? அன்று நீங்க மகாலட்சுமி இன்று?
ஏன் திரும்ப அப்படி நீங்க வாழமுடியாதா முடியும் சிந்தியுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நாளும் மனசில வைத்து பூட்டி வைத்திருந்ததை கொட்டி தீர்த்துவிட்டான் மலர் மவுனமாக கேட்டாள் உள்ளத்தில் சிறு ஒளி.

இந்த பிள்ளையார் கோயில் பெயர் போன கோயில் நாட்டுப்பிரச்சனையால் சேதமடைந்த பின்னும் இன்று பல புலம்பெயர் உறவுகளால் புதுப்பிக்கப்பட்டு பிரமாண்டமாய் காட்சி தருகிறது.

இன்று அப்படி ஒரு அதிதி வருவதாக இருந்ததால் சிறப்பு பூசை
சிற்றூர்தி படகுபோல கோயில் முன்னாடி வந்துநிற்க அதிலிருந்து ஒரு பெண்மணியும் ஓர் ஆணும் இறங்கி வந்தனர்.

இவர்களை எங்கோ கண்டதாக மலர் எண்ணினாள். சரி நமக்கென்ன என பேசாமல் பூசையில் ஒன்றிவிட்டான் அவ்வாறே தனாவும். இன்று அவனுக்கு இரவுப் பணி.

கருவறைப் பூசை முடிந்து ஐயர் தீபம் காட்டியபின் எல்லோரும் காட்ட பக்கதர்கள் தொட்டு வணங்கினர்

அதிதியாய் வந்த அந்த புதியவன் மறுத்துவிட்டு வெளியே சென்றான். தாய்தான் வணங்கிவிட்டு "மன்னிக்க ஐயா. அவனுக்கு இந்த சம்பிரதாயங்கள் தெரியாது அதான்" பரவாயில்லம்மா இது ஆண்டவன் சந்நிதி இங்கு விருப்பு வெறுப்பு அப்பாற்பட்டது.

மகனிடம் கண்டித்தார் அம்மையார். இங்க பார் நவீன், நாளை உன் நிச்சயதார்த்தம். லண்டனில் இருந்து வந்து நம்ப பரம்பரை கோயில்பூசை செய்கிறோம். பாரம்பரியம் மிக்கது. எம் குலசாமி. இங்காவது உன் விளையாட்டு புத்தியை விட்டுட்டு கும்பிடு.

சரிம்மா சரி புலம்பாதீங்க.
நான் உங்க மகன் உங்களால அருள் எனக்கும் கிடைக்கும்.ஏதோ கதைத்து சமாளிங்க.
பின் தாயின பின்னால் கைகட்டி நின்றான்.

பூசைமுடிந்தது. அவர்கள் கைகளால் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. அப்போது அந்த அம்மையார். மலரைப்பார்த்து. இந்தா புள்ள இந்த பாத்திரத்தை கழுவி வை. ஐயாக்கு உதவியாய் இருக்கும்.

மலர் ஒரு கணம் திகைக்க, சச்சுதான் கைபிடித்து இழுத்தாள் .பேசாம இருடி
பின் மலர் சுதாகரித்து கோயிலுக்கு தானே எனபேசாமல் சென்று வேண்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகணம். இதனைப்பார்த்த தனா கோபமுற்றான். என்ன மாதிரி பெண் இவள் இவளைப்போய்...இந்த அம்மையார் இப்படி........

அதே நேரம் நவீன் மலரைப்பார்த்த பார்வை எடுக்கவில்லை. அழகிய தேவதை பொன்னிறம். பூவையிவள் கூந்தலோ பேரழகு. ஆனால் முகத்தில் மட்டும் ஏதோ சோகம். இவனின் இந்த பார்வை தனாவின் கண்களுக்கு தப்பவில்லை. மனதில் ஏதோ நெருடியது.

இறைவா
தனா மனம் சலனப்பட மலரை பின் தொடர எத்தனிக்கையில்.

ஏய் .....
தனாவை நவீன் கூப்பிட்டான் .

என்ன?
இங்க வா

ஏன்?
எனக்கு உதவி பண்ணு
அதுக்கு நான் ஆளில்லை.
ஏய் கேவலம் எடுபிடி வேலை பார்க்கிற நீ என்னமா கதைக்கிற?
எடுபிடியா ஐ ஆம் ஏ டாக்டர். நான் ஒரு மருத்துவன் இங்கு சில தொண்டுகள் புரிவது என் ஆத்ம திருப்தி.

ஓ....நவீன் இழுத்தான்.
இதனைப்பார்த்த ஐயரும் பக்கம் வந்து சமாதானப்படுத்தினார்.
மலர் ஓடிவந்து பயந்த மாதிரி நிற்க தனா அமைதியானான்.

அப்புறம் தனாதரன் வாங்க நாம அந்தப் பக்கம் போகலாம் என சச்சு மலர் தனா போயினர்.
இதனைப்பார்த்த நவீன் கறுவினான்.
போங்க ஒரு வழி பண்ணாம நான் போக மாட்டேன்
நடைக்கதவு சாத்த ஆயத்தமானார்கள்
இவர்களுக்கு விதிக்கதவு திறக்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழாக் காணும் இராஜராஜேஸ்வரி அம்மா

முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார்.
மத்திய பல்கலைக்கழகம் திருவாரூர், தமிழ்நாடு.



திருக்கோணமலையில் அன்னியர் படையெடுப்புகளால் கலைகளின் வளர்ச்சி சிறிது வளம் குன்றியிருந்தநிலையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருக்கோணமலை நகரிலே அவதரித்தார் செல்வி.பா.இராஜராஜேஸ்வரி அம்மையார் அவர்கள். 24-2-1920 ஆம் நாள் திருக்கோணமலையிலே திரு.முகாந்திரம் பாலசுப்பிரமணியம், தங்கநாச்சியார் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் தவப்புதல்வியாக அவதரித்தார்.

இராஜராஜேஸ்வரி அம்மையார் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை திருக்கோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்திலும், திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரியிலும், யாழ் உடுவில் மகளிர் ஆங்கிலப் பாடசாலையிலும் சிறப்பாக பயின்றவர்.

தமது இசைக்கல்வியை திருவாளர் இரத்தினம் என்பவரிடமும் சாமி குணசேகரம் என்பவரிடம் தேவாரமும் பயின்றார். இசைக்கலை மேல் கொண்ட பக்தியால் தமது மேல்படிப்பினை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தார். அங்கு வீணையும் வாய்ப்பாட்டும் சிறப்பாக கற்றுத்தேர்ந்து டிப்ளோமா பட்டத்தினைப் பெற்று தாயகம் திரும்பினார். இலங்கை முழுவதும் தமது இனிய குரல் வளத்தினால் பல இசையரங்குகளை நிகழ்த்தினார். இலங்கை வானொலியில் பல இசை நிகழ்ச்சிகள் செய்தார் திருக்கோணமலையிலிருந்து இலங்கை வானொலியில் பாடிய *முதல்பெண்* என்ற பெருமையைப் பெற்றார்.

சிறந்த கல்வியும் சரளமான ஆங்கில அறிவும், நல்ல இசைஞானமும் பெற்றிருந்த போதும் உயர்ந்த அரச வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கான தகுதி பெற்றிருந்தும் பணம் ஈட்டும் நோக்கம் இன்மையாலும் முழுக்க முழுக்க சேவை மனப்பாங்கும், இறையன்பும் உடையவராக. விளங்கியமையால் திருக்கோணமலையில் அக்காலத்தில் மங்கியிருந்த இசைக்கலைக்கு ஒளி கொடுக்கும் முகமாக "தக்ஷண கான சபா" என்ற கல்விக்கோயிலை 1947 ஆம் ஆண்டு பங்குனி மாதம் திருக்கோணமலையில் ஆரம்பித்தார். தமது இல்லத்தையே கல்விக்கலாசாலையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றினார். சுவாமி நடராஜானந்தா அவர்கள் வகுப்புகளை தொடங்கிவைத்து ஆசீர்வதித்தார்.



1948 ஆம் ஆண்டு வீணை கற்பிப்பதற்காக கிருஷ்ணமூர்த்தி ஐயர் எனும் வித்துவான் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டார். ஆரம்பித்த இரண்டு வருடங்களுக்குள் 71 மாணவிகளைப் பெற்றது கலாசாலை.

சுவாமி விபுலானந்த அடிகள் இந்துக்கல்லூரி அதிபராக இருந்தபோது கல்லூரியில் இசை வகுப்பு நடாத்த ஓர் அறையை கொடுத்து ஆசீர்வதித்தார். 1951 ஆம் ஆண்டு முதல் வடஇலங்கை சங்கீத சபை நடாத்தும் பரீட்சைக்கு மாணவிகளை இராஜராஜேஸ்வரி அம்மையார் அனுப்பிவைத்தார். ஆரம்பத்தில் பரீட்சைக்காக கொழும்பு அல்லது யாழ்ப்பாணத்திற்கு செல்லவேண்டிய நிலமை இருந்தது. பின் இராஜராஜேஸ்வரி அம்மையாரின் முயற்சியால் திருக்கோணமலையிலேயே பரீட்சைகள் நடத்தப்பட்டன. 1960 இல் வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 5ஆம் பிரிவுப் பரீட்சையில் தெட்சண கான சபா மாணவி ஒருவர் சிறப்புச் சித்திபெற்றார்.

பரீட்சைக்காலங்களில் மாணவிகளை தமது வீட்டிற்கு அழைத்து தங்கவைத்து உணவளித்து சிறப்புப் பயிற்சியளித்து தயார் செய்தார். 1957ம் ஆண்டு ஆசிரியர் தர பரீட்சைக்கு முதன்முதலாக கமலாதேவி என்ற மாணவி சபா மூலம் தோற்றி சித்தி பெற்றார். பின் சபாவிலேயே முதல் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தெட்சண கான சபா மூலமாக இரு மாணவியர் இந்தியாவிற்கு டிப்ளோமா இசை மேற்படிப்பிற்கு இராஜேஸ்வரி சந்திரசேகரம், விஜயசௌந்தரி தாமோதரம்பிள்ளை என்பவர்கள் அனுப்பப் பட்டனர். இவர்களுள் இராஜேஸ்வரி என்ற மாணவி தெட்சண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான சபாவில் ஆசிரியராகப் பணியாற்றி பின்னாளில் மட்டக்களப்பு விபுலானந்தர் அழகியல் கற்கை கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்து பின்னாளில் இசைத்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவராவார்.

நான்கு மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட சபா 1972 ஆம் ஆண்டில் 200 மாணவிகளைப் பெற்று சாதனை படைத்தது. சபாவின் செயற்பாடுகளாக இசை மட்டுமன்றி இசைக்கருவிகள், நாடகம், பரதநாட்டியம் ஆகியவையும் பயிற்றுவிக்கப்பட்டன.

குன்றக்குடி அடிகளார் சபாவிற்கு இரு தடவை வருகைதந்து மாணவியர் பாடிய திருவாசகப் பாடல்களை கேட்டு இன்புற்று பாராட்டிச்சென்றுள்ளார்.

சுவாமி விபுலானந்த அடிகள், சுத்தானந்த பாரதியார், ஸ்ரீ ரங்கானந்த சுவாமி, காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், அகில உலக திவ்ய ஜீவன சங்கத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி சித்தானந்த சரஸ்வதி மகராஜ், சுவாமி சச்சிதானந்த யோகிராஜ், புகழ்பெற்ற இசைக்கலைஞர் டி.எம்.சௌந்தர்ராஜன் ஆகியோர் சபாவிற்கு வருகை தந்தும் ஆசிகளை அனுப்பியும் வாழ்த்தியவர்களாவார்.

தெட்சண கான சபா 1951 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டு வரையுள்ள 22 ஆண்டு காலப் பகுதியில் 429 மாணவர்கள் வடஇலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தோற்றியதில் 419 மாணவியர் சித்தி பெற்றனர். 17 மாணவியர்கள் அரசினால் இசைஆசிரியர்களாக நியமனம் பெற்றனர்.

ஏராளமான மாணவர்கள் கர்நாடக இசை, பண்ணிசை, கருவியிசை ஆகியவற்றை சபாவில் கற்றுத்தேர்ந்து பயன் பெற்றனர். இலங்கை வானொலியிலும் மாணவிகளை அழைத்துச் சென்று பாடச்செய்தார்.

திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்கத்தின் தலைவியாகவும், திருக்கோணமலை ஸ்ரீசண்முகவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தலைவியாகவும், திருக்கோணமலை சைவ மகளிர் மன்றத் தலைவியாகவும் சேவைபுரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம் வாழ்நாள் முழுவதையும் இல்வாழ்க்கையை நுகராது இறைசேவைக்கும், இசைச்சேவைக்கும் அர்ப்பணித்துப் பணியாற்றிய இராஜராஜேஸ்வரி அம்மையார் 1972 ஆம் ஆண்டு கோணேஸ்வரப்பெருமான் திருவடியை அடைந்தார்.

அம்மையார் ஏற்றிய தெட்சணகான சபா என்ற சுடர் அவர் காலத்தின் பின் அவரது சகோதரர்களான பா.நேமிநாதன் (திருக்கோணமலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), திருமதி பாலேஸ்வரி (எழுத்தாளர்) ஆகியோரினாலும் சகோதரர்களின் மறைவிற்குப் பின்னர் தற்காலம் அம்மையாரின் மாணவி நகுலேஸ்வரி நற்குணம் அவர்களாலும் சபா தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

குருவைப்போலவே இலவச வகுப்புகளை நடத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் திருமதி சந்திராதேவி சிவகுமாரக் குருக்கள் மற்றும் திருமதி விஜயகுமாரி தவசிலிங்கம் ஆகியோர் ஆவர். தற்போதும் முத்துக்குமார சுவாமி ஆலய கல்யாண மண்டபத்தில் திருமதி விஜயகுமாரி அவர்கள் இசை நடன கலாலயம் என்ற பெயரில் இலவச கலை வகுப்புகளை நடத்தி ஏராளமான மாணவர்களை உருவாக்கி வருகிறார்.

உலகெங்கிலும் "இராஜராஜேஸ்வரி அம்மையார்" என்ற விருட்சத்தின் விழுதுகள் பரந்து விரிந்து இசை நிறுவனங்கள் பல அமைத்து இசைத்துறையில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர்.

அம்மையாரின் வெற்றுடல் மறைந்தாலும் அவர்கள் ஏற்றிய இசை எனும் சுடர் மாணவர்கள் மூலம் உலகெங்கிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

நிகழும் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாள் *இராஜராஜேஸ்வரி அம்மையாரின்* நூற்றாண்டு விழாவினை அவரது மாணவர்களும் உலகெங்கிலுமுள்ள மாணவர் பரம்பரையினரும் கொண்டாடத் தயாராகி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமுறும் காலநிலையும் மாற வேண்டிய மக்களும்

*மகாவலி கங்கையும் திருக்கோணமலை மாவட்ட விவசாயிகளும்*

பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம்
பொருளியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்

ஒரு மதிப்பீட்டின் படி வருடாந்தம் எழுபது இலட்சம் ஏக்கர் சதுரப் பரப்பில் அடக்கக்கூடிய மகாவலி கங்கை நீர் கொட்டியாரக்குடாக் கடலில் வீணே கலப்பதாக அறிய முடிகின்றது. இவ்வாறான நிலைமையில் மிகக் குறுகிய செலவில் மூதூர் கிழக்கு நோக்கி ஒரு கிளை வாய்க்கால் மூலம் மகாவலி கங்கை நீரை திசை திருப்பி இப்பிரதேசத்தில் உள்ள பல நூற்றுக்காணக்கான குளங்களுக்கு நீர் வழங்குவதன் மூலம் பள்ளிக்குடியிருப்பு, கட்டைபறிச்சான், சேனையூர், சம்பூர், கூனித்தீவு, நல்லூர், பாட்டாளிபுரம், வீரமாநகர் மற்றும் இளக்கந்தை பிரதேசங்களில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நிரந்தர நீர்பாசன வசதி பெறும் நிலை உருவாகும்.

ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்து எழுபது ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இவ்வாறான ஒரு திட்டம் செயற்படுத்தப்படாமைக்கு அரசியல் காரணங்களே காரணமாக அமைகின்றன. இனிவரும் காலத்திலாவது இவ்வாறான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு மூதூர் கிழக்கு வளங்கொழிக்கும் பிரதேசமாக உருவாக்கப்படல் வேண்டும்.

## குளங்களைப் புனரமைத்தல்

திருக்கோணமலை மாவட்ட விவசாயத்தில் குளங்களின் பங்கு அளப்பரியதாகும். கடந்த முப்பதாண்டுகளில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட துறை விவசாயத்துறையாகும். திருக்கோணமலை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குளங்கள் புனரமைக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன. இக்குளங்கள் புனரமைக்கப்படும் போதே மானாவாரிப் பயர்ச்செய்கை வயல்நிலங்கள் அறுவடை பொய்க்காத முழுமையான விளைச்சலைத் தர முடியும்.

## காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப விவசாயிகள் மாற்றமடைய வேண்டும்

உலகளாவிய ரீதியில் காலநிலை பல்வேறு காரணங்களினால் மிக வேகமாக மாற்றமடைந்து கொண்டு செல்கின்றது. ஆய்வுகளின் படி இனிவரும் காலங்களில் குறுங்காலத்தில் அதிக மழை வீழ்ச்சியும் நீண்ட காலத்தில் வரட்சியும் நிலவப்போவதாக அறிய முடிகின்றது. ஆகவே விவசாயிகள் குறுங்காலத்தில் அதிக விளைச்சலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக்கூடிய பயிரினங்களைப் பயிரிடவேண்டும். பொதுவாக இலங்கையில் 2018 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி விவசாயத்துறையில் 26 விழுக்காடு ஊழியப்படையினர் காணப்பட்ட போதும் விவசாயத்துறைக்கு அவர்களின் பங்களிப்பு 6 விழுக்காடு மட்டுமே உள்ளது.

ஆனால் கைத்தொழில் துறையிலும் அதேயளவான 26 விழுக்காடு ஊழியப்படையினர் 27 விழுக்காடு பங்களிப்பை செய்கின்றனர். இதிலிருந்து விவசாயத்துறையில் தங்கியுள்ளவர்களின் உற்பத்தித் திறன் மிகவும் குறைவாக உள்ளமை புலனாகின்றது. உண்மையில் பல விவசாயிகள் மூன்று மாதம் மட்டுமே நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதாகவும் மற்றைய ஒன்பது மாதங்களும் வேலையின்றி இருப்பதாகவும் பல கொள்கை வகுப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனாலேயே விவசாயிகளிடத்தில் வேலையின்மை, வறுமை மற்றும் குறைந்த உற்பத்தித் திறன் காணப்படுவாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆகவே விவசாயிகள் அனைவரும் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடாத காலங்களில் மாற்றுப்பயிர்ச் செய்கையில் ஈடுபடவேண்டும் என்பதுடன் அரசாங்கமும் அவர்களுக்கு உரிய முறையில் பயிற்சிகளையும் ஏனைய உதவிகளையையும் செய்ய வேண்டும்.

நுகர்வோர் உணவுப் பழக்கவழக்கத்தில் மாற்றம் வேண்டும்.

இலங்கை மக்கள் அதிகளவில் அரிசி மற்றும் அது சார்ந்த உணவுகளை அதிகம் உண்பதால் நீரழிவு வியாதி உட்பட்ட பலவிதமான நோய்களுக்கு உள்ளாவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். உடல்நல ஆரோக்கியத்தினைக் கவனத்திற் கொண்டு மக்கள் அரிசி உணவுகளைக் குறைத்து மரக்கறிகளையும் பழ வகைகளையும் அதிக அளவில் உண்ண வேண்டும் எனவும் மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் நெல் உற்பத்தியில் ஈடுபடும் போது அதிகளவில் நீரைப் பயன்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. ஆனால் மரக்கறிகள் மற்றும் பழப்பயிர்களை கூடுதலாகப் பயிரிடும் போது நீருக்கான தேவையும் குறைந்து விடுகின்றது. ஆகவே உடல் ஆரோக்கியத்திற்காகவும் எதிர்காலத்தில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இருப்பதாலும் நுகர்வோர் உணவுப் பழக்கவழக்கத்தில் மாற்றம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும், மேற்பார்வையும்

மாணிக்கம் இளங்கோ
அதிபர்,
தி/மூ/சண்பகவல்லி வித்தியாலயம்.

மேற்பார்வையில்லாத செயற்பாடுகள் எப்போதும் நேர்த்தியான முடிவுகளைத் தருவதில்லை. பாடசாலைகளில் பல்வேறு மட்டங்களில் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.இருந்தும் அனைத்தும் முழுமையான வெற்றியையோ நிறைவையோ தருவதில்லை அதற்குக்காரணம் முறையாக மேற்பார்வை செய்யப்படாமையே என்பதில் பல பாடசாலைகள் கண்டுகொள்வதும் இல்லை. கவனம் செலுத்துவதுமில்லை. எனவே பாடசாலைகளில் மேற்பார்வை எனும் பணி இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

சிலவேளைகளில் மேற்பார்வை எனும் சொல் பிழையாக அர்த்தம்கொள்ளப்படுகிறது.அதனால் மேற்பார்வைக்கு உட்படுவோர் வெறுக்கின்ற அல்லது நிராகரிக்கின்ற சொல்லாக கருதப்படுகிறது.

இதற்குக் காரணம் மேற்பார்வைபற்றிய தெளிவு மேற்பார்வைக்கு உட்படுவோருக்கு மாத்திரமன்றி அப்பணியில் ஈடுபடுவோருக்கும் அதன் வரையறை மற்றும் தெளிவின்மையே ஆகும்.

மேற்பார்வை என்பது முகாமைத்துவத்தில் இடம்பெறும் கட்டுப்பாடு (Control) எனும் செயலியின் கீழ் கணிக்கப்படுகிறது. அத்தோடு அது கல்வி நோக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு அவசியமான தரவுகள் அல்லது தகவல்களைத் திரட்டுகின்ற செயன்முறையும், வழிகாட்டும் உத்தியுமாகும்.எனவே கல்வி நிறுவனமாகிய பாடசாலைகளில் மேற்பார்வை வழிகாட்டும் செயல்முறைக்கான முகாமைத்துவச் செயலாகவும் கருதமுடியும்.

செயற்திறனுடைய ஒருபாடசாலை தன் நோக்கங்களை அடைவதற்குச் செயற்படும் இயல்பையும், அவ்வியல்பு பொருத்தமானதா? பொருத்தமற்றதா என்பதனையும் கண்டறிவதற்கு மிகச்சிறந்த உபகரணம் மேற்பார்வையாகும்.

பாடசாலைகளில் இன்றுவரை நடைமுறையிலுள்ள கல்வி அமைச்சின் 1982.02.27 ஆம் நாள் 1981/13 ஆம் இலக்க "பாடசாலையில் மனிதவலுவிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சப் பயனைப்பெறாதிருத்தல்" எனும் தலைப்பினையுடைய சுற்றுநிருபத்தில் ஐந்தாம் (ஏ) இலக்க தலைப்பில் ஆசிரியர் குழு மேற்பார்வை எனும் விடயத்தில் மேற்பார்வை பற்றி பின்வருமாறு வலுயுறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு பாடசாலைத் தவணையுள்ளும் எல்லா விடயங்கள் தொடர்பாகவும் ஆற்றப்படவேண்டிய பணிகளும் பல்வேறு துறைசார்ந்த ஒவ்வொரு நாளும் ஆற்றப்படவேண்டிய வேலைகளும் ஆசிரியர்களால் பேணப்படவேண்டிய குறிப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை அதிபர்கள் உறுதிசெய்ய வேண்டும். இக்குறிப்பேடுகள் அதிபரால் பரிசீலிக்கப்பட்டு ஒப்பமிடப்படல் வேண்டும். பாடசாலைக்கு விசயம் செய்யும் போதும் வருடாந்த மேற்பார்வையின் போதும் இக்குறிப்புகள் கல்வி அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு ஒப்பமிடப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலைகளின் உள்வாரி, வெளிவாரி மதிப்பீட்டு மேற்பார்வையானது கல்வி அமைச்சின் 2014.12.02 ஆம் நாள் 2014/13 ஆம் இலக்க "எமது பாடசாலை எந்தளவுக்கு தரமானது" எனும் தலைப்பிடப்பட்ட சுற்றுநிருப கையேட்டிற்கமைமையவே மேற்கொள்ளப்படுகிறது. இம் மேற்பார்வை மதிப்பீடானது. பின்வரும் 8 தலைப்பின்கீழாக மேற்கொள்ளப்படுகிறது.

1. மாணவர் அடைவு
2. கற்றல் கற்பித்தல் மதிப்பீடு
3. முறையான கலைத்திட்ட முகாமைத்துவம்
4. இணைப்பாடவிதான செயற்பாடுகள்
5. மாணவர் நலன்புரி
6. தலைமைத்துவமும் முகாமைத்துவமும்
7. பௌதிகவள முகாமைத்துவம்
8. பாடசாலையும் சமூகமும்

எனவே பாடசாலையில் நடை முறைப்படுத்தப்படும் முறையான மேற்பார்வை செயற்பாடானது செயற்திறனுடன் கூடிய விளைத்திறனுள்ள பாடசாலையாக மிளிரச் செய்வதோடு சிறந்த வெளியீட்டையும் பெற்றுத்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசிய எழுத்துக்கலை (Cryptography)

திரு.ச.திவாகர், பொறியியலாளர், புதுக்குடியிருப்பு தம்பலகமம்.

இரகசிய எழுத்துக் கலை (Cryptography) எனப்படுவது பண்டைய காலத்தில் இருந்தே இரகசிய தகவல் பரிமாற்றத்திற்காக பயன்பாட்டில் இருந்துவரும் ஒரு முறையாகும். தகவலை குறியீட்டு வடிவிலோ, அல்லது எழுத்துக்களை குழப்பி எழுதுவதன் மூலமோ அனுப்புபவர் (Sender), பெறுபவர் (Receiver) தவிர பிறர் ஒருவர் அறிந்துவிட முடியாத வகையில் அனுப்பப்படும் ஒரு முறையே ஆகும். இவ் முழுச் செயற்பாட்டை இரு பகுதிகளாக பிரிக்கலாம்.

குறியாக்கம் / மறையாக்கம் (Encryption)
மறைநீக்கம் (Decryption)

இவ் இரு செயற்பாடுகளுடன் இரகசிய எழுத்துக் கலை (cryptography) எவ்வாறு தகவல் பரிமாற்றத்திற்கு உதவுகின்றது என்பதை பின்வரும் வரைவு மூலம் பார்க்கலாம்.



வரைவில் காட்டப்பட்டுள்ளது போல், அனுப்புபவரிடம் (Sender) இருந்து தகவல் (plaintext) பெறுபவருக்கு (Receiver) மறையாக்கப்பட்டு (Encryption) அனுப்பப்படும், மறையாக்கப்பட்ட தகவல் (cipertext) பெறுபவருக்கு கிடைத்தவுடன் மறைநீக்கப்படும் (Decryption).

இரகசிய எழுத்துக் கலை (Cryptograpy) தற்போது பல்வேறு தொழில்நுட்ப கருவிகளிலும் இணையத் தொடர்பாடலிலும் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக பகிரி (whatsapp), மின்னணு பணம் (electronic money) போன்றனவற்றை குறிப்பிடலாம்.

இங்கு தகவலை மறையாக்கம் (Encryption) செய்வதற்கும், மறைநீக்கம் (Decryption) செய்வதற்கும் ஒரு பொறிமுறையை (Mechanisim) அனுப்புபவரும் (Sender), பெறுபவரும் (Receiver) பொதுவாக வகுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அப் பொறிமுறை இரகசியமாக பேணப்படவும் வேண்டும். ஏனெனில் அப்பொறிமுறையை பிறர் அறிந்தால் அனுப்பப்படும் தகவலை மறைநீக்கம் (Decryption) செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துவிடவோ அல்லது பிழையான தகவலை மறையாக்கம் (Encryption) செய்து அனுப்பி குழப்பத்தை ஏற்படுத்தி விடவோ முடியும்.
அப் பொதுவான பொறிமுறையை (Mechanisim) இருவரும் எவ்வாறு வகுத்துக் கொள்வது என்பதும், அதை இரகசியமாக எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதும், அது எவ்வாறு திருடப்படலாம் என்பதும் ஓர் சுவாரசியமான விடயமாகும். அதிலும் இணையத்தில் அது எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது இன்னும் சுவாரசியம் நிறைந்ததே.

இரகசிய எழுத்துக் கலை (Cryptography) இனை ஒரு எடுத்துக்காட்டுடன் இப்போது பார்ப்போம்.

அனுப்புபவர் (Sender) "HELLO" எனும் தகவலை பெறுநருக்கு (Receiver) அனுப்ப வேண்டும் என வைத்துக் கொள்வோம். ஆங்கில எழுத்து 26 ஐ கருதுக.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M |
| N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |

இவற்றில் ஓரு எழுத்திற்கு பதிலாக (Substitute) மூன்று எழுத்து வலது புறமாக (Right Shift) தள்ளியுள்ள எழுத்தை மறையாக்கத்திற்கு (Encryption) தேர்வு செய்வது எனவும், மூன்று எழுத்து இடது புறமாக (Left Shift) தள்ளியுள்ள எழுத்தை மறை நீக்கத்திற்கு (Decryption) தேர்வு செய்வது எனவும் இருவரும் பொறிமுறையை தீர்மானிக்கின்றார்கள் என வைத்துக்கொள்வோம்.

(தொடரும்)



அமெரிக்காவில் வேப்பங்குச்சி விலை 14டாலராம். அதாவது 14×71= 994 ரூபாய். அறிமுக சலுகையாம்.
முளைபு வேப்பங்குச்சி, கரியில் பல் தேய்த்தவர்களை கிண்டலடித்து Paste கரு. மாற வைத்து தறபோது இதை வியாபாரம் ஆக்குகிறார்கள். இது போல தான் தேங்காய எண்ணெயில் கொழுப்பு என்றார்கள். தற்போது தேங்காய் எண்ணெய் பாக்கெட்டுகளில் அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள்.

**உலகின் முக்கிய நாட்கள்**

**மார்ச் மாதம்**

08 - சர்வதேச பெண்கள் நாள்
13 - உலக சிக்கன நாள்
14 - உலக புகையிரத நாள்
புகைப்படப்பிடிப்பாளர் நாள்
15 - உலக நுகர்வோர் நாள்
உலக ஊனமுற்றோர் நாள்
19 - உலக ஸ்கொஸ் நாள்
21 - வர்க்க பேத எதிர்ப்பு நாள்
சர்வதேச காடுகள் நாள்
உலக கவிஞர் நாள்
உலக பொம்மலாட்ட நாள்
22 - உலக குடிநீர் நாள்
23 - உலக காலநிலை நாள்
24 - உலக காச நோய் நாள்
27 - உலக திரையரங்கு நாள்
30 - உலக சமூக அபிவிருத்தி நாள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பென் விஷன் அச்சகம்
# බෙන් විෂන් පිටපත් මුද්‍රණාලය
# Ben Vision Printers

Queen of Printing
Ben Vision Printers & Publication

# 87, Main Street, Trincomalee
T | 0262225984-5 M | 0769000035 M | 0775718119
E-mail - benvisionprinters@gmail.com

**Offset Printing, Colour Printing, Digital Printing, Sticker Printing, Screen Printing, Laminating, Invitation Cards, Scanning, Leaflets, Visiting Cards & Type Setting**

## Ben Vision PAPER COM

## *15/5, Huskison Road, Trincomalee*

***Wholesalers, Importers, Manufacturers & Suppliers of All Kind of Papers, Boards & Stationery***

*Such as:*
*Papers (Bank) - 56gsm, 60gsm, 70gsm,80gsm*
*(Art paper) - 85gsm, 90gsm, 100gsm, 120gsm, 150gsm*
*Carbonized Paper - 1st copy, 2nd copy, 3rd copy*
*Poster Paper - 40gsm, 45gsm, 50gsm, 60gsm (Colour available)*
*Boards (Art board) - 230gsm,260gsm, 300gsm, 310gsm, 360gsm*
*(Box board) - 250gsm, 300gsm, 400gsm, 450gsm*

*You can buy in any sizes (Full size, A2, A3, A4 etc)*
*Stationery items, Execrise Books and everything in one Roof!*

***Special Discount For Printers** *Transport Free for Bulk Orders


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org